


Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :209 ஆனி 11ஆம் நாள் வியாழக்கிழமை 25 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

# 20,000 புலனாய்வாளர்கள் தாயகத்தில் களமிறக்கம்!

## தமிழ்க் கூட்டமைப்பு அதிர்ச்சித் தகவல் இராணுவ ஆட்சிதான் என்றும் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 25

தமிழர் தாயகப் பகுதிகளில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 20 ஆயிரம் உளவாளிகளை நடமாடவிட்டுள்ளார். ஜனநாயகத்தில் பெற்ற வெற்றி என்று கூறிக்கொண்டு இந்த நாட்டில் அவர் முழுமையான இராணுவ ஆட்சி ஒன்றை நிறுவினாலும் – சர்வாதிகார ஆட்சியொன்றை நிறுவினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அப்படித்தான் நிலைமைகள் இருக்கின்றன. 19 ➤



## எரிபொருள் விலை மாறாது !

கொழும்பு, ஜுன் 25

இலங்கையில் இந்த ஆண்டின் இறுதிவரை எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படாது என்று போக்குவரத்து முகாமைத்துவம், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். 19 ➤

## கொரோனா 2,000+

கொழும்பு, ஜுன் 25

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நேற்றிரவு 2ஆயிரத்தைக் கடந்தது.

நேற்று புதன்கிழமை இரவு வெளியான அறிக்கையின்படி 10 பேர் கொரோனா நோயாளர்களாக புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். 18 ➤

## அக்கராயன் மருத்துவமனை பணிகளை நிறுத்த உத்தரவு?

கிளிநொச்சி, ஜுன் 25

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அக்கராயன் மருத்துவமனையை கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனையாக மாற்றும் பணிகளை இடைநிறுத்துமாறு கொழும்புத் தகவல் 19 ➤

## புலிகளின் மறுவழ்வம் தமிழ்க் கூட்டமைப்பே!

### இப்படிக் கூறுகின்றது மஹிந்த அணி



கொழும்பு, ஜுன் 25

தமிழீழவிடுதலைப்புலிகளின் மறுவடிவம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே என்று மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் புதிய ஹெல உறுமயவின் தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

"புலிகளை அழிக்க உதவிய இந்தியா, புலிகளின் மறுவடிவமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உதவ முன்வர மாட்டார்கள்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"கிழக்கு மண்ணில் 19 ➤

### நயினாதீவில்

## பக்தர்களை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி

யாழ்ப்பாணம், ஜுன் 25

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் தனியாள் இடைவெளி பேணி உள் வீதியில் சுமார் 70 அடியவர்களையும் வெளி வீதியில் சுமார் 300 அடியவர்களையும் அனுமதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை கூட்டத்தின் 17 ➤

## தேர்தலின் பின்னர் மீள இணைப்போம்

### பிரிந்தவர்கள் பற்றி கூறுகின்றார் மாவை

யாழ்ப்பாணம், ஜுன் 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பலர் வெளியேறியிருக்கிறார்கள். இது தொடர்பில் கவலைப்படுகின்றேன். தேர்தல் முடிந்த பின்னர் அவர்களை இணைத்துப் பயணிப்போம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதி 19 ➤

### நயினாதீவுக்குச் செல்ல

## ஊடகவியலாளர்களுக்கும் தடை!

யாழ்ப்பாணம், ஜுன் 25

செய்தி சேகரிப்பதற்காக நயினாதீவுக்குச் சென்ற ஊடகவியலாளர்களை, அங்கு செல்ல வேண்டுமானால் அரச அதிபரின் அனுமதிக் கடிதம் வேண்டுமெனக் கூறி பொலிஸார் திருப்பி அனுப்பி உள்ளனர். இந்தச் சம்பவம் குறிகாட்டுவான் இறங்குதுறையில் நேற்று நடைபெற்றது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது

நயினாதீவு நாகபூஷணி ஆலய மஹோற்சவத்தில் 50 க்கும் மேற்பட்டோர் பங்குபற்றத் தடை 19 ➤

### இருவேறு இடங்களில்

## வாள்கள் மீட்பு: மூவர் கைது

### கொழும்புத்துறையில்



யாழ்ப்பாணம், ஜுன் 25

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பகுதியில் வாள் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் இராணுவத்தினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். 19 ➤

### வனஜீவராசிகள் திணைக்களத்தால்

## மணல் விநியோகம் யாழில் முடங்கும்?

யாழ்ப்பாணம், ஜுன் 25

யாழ்ப்பாண மாவட்டத்தில் மணல் அகழ்வதில் புதிய சிக்கல் தோன்றியுள்ளது.

இதுவரை காலமும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மணற்காட்டுப் பிரதேசத்தில் மணல் அகழ்வு முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், அந்தப் பிரதேசம் தமது ஆளுகைக்கு உட்பட்டது என்று வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அந்தப் பகுதிக்குள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான மணல் விநியோகம் முழுமையாகப் பாதிக்கப்படும் நிலைமை தோன்றியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மணல் அகழ்வுக்கான அனுமதி 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் தனியாரிடம் வழங்கப்பட்டிருந்தது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் 18 ➤

# முன்னணி, ஈ.பி.டி.பி., சுதந்திரக் கட்சி கூட்டுச்சேர்ந்து தோற்கடித்தன கூட்டமைப்பை

## யாழ். மாநகர சபை அமர்வில் இந்த நிலைமை

யாழ்ப்பாணம், ஜூன் 25

**மாநகர முதல்வரின் தனிப்பட்ட ஆளணியினரை பணி நீக்கம் செய்வதா இல்லையா என்பது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையில் நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி., சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்பன இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தோற்கடித்தன.**

தீர்மானத்துக்கு ஆதரவாக 15 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன.

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வரின் தனிப்பட்ட ஆளணியில் 6 பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் மூவர் ஏற்கனவே பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். எஞ்சிய மூவரும் பதில் முதல்வரின் தனிப்பட்ட ஆளணியில் செயற்பட்டு வருகின்றனர்.

இவர்கள் 6 பேரையும் நிரந்தரமாக பணி நிறுத்தம் செய்யவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் மயூரன் தீர்மானத்தை முன்மொழிய அந்தக் கட்சியைச் சேர்ந்த பத்மமுரளி அதனை வழிமொழிந்தார். இந்தத் தீர்மானத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்புத் தெரிவித்தது. இதனையடுத்து வாக்கெடுப்பை நடத்த பதில் முதல்வர் உத்தரவிட்டார்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் தீர்மானத்துக்கு எதிராகப் பேசிவிட்டு சபையிலிருந்து வெளியேறினார். அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களும் சபையிலிருந்து வெளியேறினர். அதன் பின்னர் நடைபெற்ற வாக்கெடுப்பில் கூட்டமைப்பினர் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தனர். தீர்மானத்துக்கு ஆதரவாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், ஈ.பி.டி.பி.யினர் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் ஆகியோர் வாக்களித்தனர். இறுதியில் தீர்மானம் 2 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

(ஒ,5)

# பிரபாகரனை அநாதையாக்கியவர் கருணாவே!

*அதை மறக்கவேண்டாம் என்கிறார் குணதாஸ*

கொழும்பு, ஜூன் 25

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா அம்மான் வெளியேறிய பின்னரே, அந்த அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அநாதையாக்கப்பட்டார். இதனை யாரும் மறந்து விட வேண்டாம். இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதியான கருணா அம்மான், ஓர் இரவில் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் இராணுவத்தைக் கொன்றதாகத் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்து தெற்கில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே குணதாச அமரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

'தமிழ் வாக்குகளைப் பெறுவதற்காகவே கருணா அம்மான் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டிருக்கக்கூடும். இதனை நாம் கண்டிக்கின்றோம். அதேபோல் கருணா அம்மான் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறிய பின்னரே பிரபாகரன் அநாதையாக்கப்பட்டார் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ஒ,5,44)

*கருணாவைச் சீண்டிய*

# காரைதீவு தவிசாளரிடமும் வாக்குமூலம் பதிவு


கொழும்பு, ஜூன் 25

காரைதீவு பிரதேசசபை தவிசாளரையும் விசாரணை செய்யவுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஆனையிறவில் 3 ஆயிரம் இராணுவத்தினரைக் கொன்றதாக கருணா தெரிவித்த கருத்து தொடர்பாக விசாரணை நடத்தும் பொலிஸார், காரைதீவு பிரதேச சபை தலைவரையும் விசாரிக்கவுள்ளனர்.

காரைதீவு பிரதேசசபை தவிசாளர் 'கொரோனாவை விட கருணா ஆபத்தானவர்' என்று தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கையிலேயே, கருணா இராணுவத்தினரை கொன்ற தகவலை வெளியிட்டார். இந்த நிலையில் காரைதீவு பிரதேசசபை தவிசாளர் கி.ஜெயசிறிலிடமும் பொலிஸார் வாக்குமூலம் பெறவுள்ளனர்.

(ஒ,5)



# வீட்டுக்கு பாதை கேட்டு ஒரு குடும்பம் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, ஜூன் 25

தமது குடியிருப்புக்கு செல்வதற்கான வீதியை பெற்றுத் தருமாறுகோரி கிளிநொச்சியில் குடும்பம் ஒன்று கண்டாவளை பிரதேச செயலகம் முன்பாக நேற்று முற்பகல் போராட்டத்தில் ஈடுபட்டது.

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் தாம் குடியிருக்கும் காணிக்குள் செல்வதற்கு சிலர் அனுமதி மறுக்கின்றனர். தமக்கு போக்குவரத்துப் பாதையை பெற்றுத்தருவதற்கு இழுத்தடிக்கின்றனர் என்று கூறி அந்தக் குடும்பம் போராட்டத்தில் ஈடுபட்டது.

பின்னர் அந்தப் பகுதி கிராம அலுவலர் ஊடாக குறித்த குடும்பத்தினர் பிரதேச செயலரை சந்தித்தனர்.

அதன்போது, குறுகிய காலத்துக்குள் அவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று பிரதேச செயலர் உறுதியளித்தார். அதனையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தெரிவித்ததாவது:

"போராட்டத்தில் ஈடுபட்டுள்ள குடும்பத்தினர் குடியமர்ந்துள்ள காணி அவர்களினுடையதல்ல. வேறு உரிமையாளரின் பெயரில் உள்ள காணியில் இவர்கள் குடியேறியுள்ளனர். இவ்வாறான நிலையில் சட்ட ரீதியான சிக்கல்கள் உள்ளன. காணி உரிமையாளருடன் ஓர் இணக்கப்பாட்டுடனேயே குறித்த பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க முடியும். மாகாண காணி ஆணையாளரின் ஆலோசனையுடனும், காணி உரிமையாளருடன் சமரசமான முறையிலும் பேசி 2 வாரத்துக்குள் குறித்த குடும்பத்தினருக்கான போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் பாதை ஒன்றைபெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்." என்று தெரிவித்தார்.

(கு-6)

# விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியதை ஐ.தே.க. மறந்துவிட்டதா?

*மஹிந்த கேள்வி*

கொழும்பு, ஜூன் 25

கருணா அம்மான் குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய கருத்தை அரசியலாக்கும் எதிர்த்தரப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு யார், ஆயுதம் வழங்கினர் என்பதை மறந்துவிட்டார்கள். கருணாவின் வரலாறு ஒன்றும் இரகசியமல்ல, அனைவருக்கும் தெரிந்ததே என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:

சவால்களை எதிர்கொள்ள முடியாதவர் சிறந்த தலைவராக செயற்பட முடியாது. நாம் ஆட்சியதிகாரத்தை பெறும் போதெல்லாம் சவால்கள் அதிகரித்ததாகவே இருந்தன. ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் தீர்க்க முடியாத பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டோம். தற்போதும் பூகோள மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொவிட் 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தி வெற்றி பெற்றுள்ளோம்.



கருணா அம்மான் குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய கருத்தை தற்போது எதிர்த் தரப்பினர் தங்களின் அரசியல் பரப்புரைகளுக்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் விடுதலைப்புலிகள் அமைப்பு பலம் பெறுவதற்கு ஆயுதம் வழங்கிய நபர் தொடர்பில் கருத்துரைப்பது இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியதிகாரத்தில் இருக்கும்போது விடுதலை புலிகள் அமைப்புக்கு சார்பாக செயற்பட்டது. பலம் வாய்ந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டன. அந்த ஆயுதங்களைக் கொண்டே விடுதலை புலிகள் அமைப்பு இராணுவத்தினரைக் கொன்றார்கள். கருணா அம்மானின் வரலாறு ஒன்றும் இரகசியமல்ல, அனைவரும் அறிந்ததே, என்றார்.

(ஒ,5)

# கூட்டமைப்பை விமர்சிப்போரை தமிழ் மக்கள் தூக்கியெறிவார்கள்

## சம்பந்தன் திடமான நம்பிக்கை



**யாழ்ப்பாணம், ஜூன் 25**

**வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் ஒரே தெரிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே! அதை இந்தத் தடவையும் எமது மக்கள் நிரூபித்துக் காட்டுவார்கள். கூட்டமைப்பை விமர்சித்துக் கொண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் எமது மக்கள் தக்க பாடம் புகட்டியே தீருவார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

ஏனெனில், அந்தக் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்காக அரசின் ஆதரவுடன் திட்டமிட்டுக் களமிறக்கப்பட்டவை என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

'இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் களமிறங்கியுள்ள தமிழ்க் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மட்டுமே விமர்சித்து வருகின்றமை' தொடர்பில் கேட்ட போதே, அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் தமிழர்களின் பிரதிநிதித்துவக் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இருந்து வருகின்றது. இந்தநிலையில், கூட்டமைப்பின் வாக்கு வங்கியை உடைக்க வேண்டும் என்பது தென்னிலங்கையின் திட்டமாக இருக்கின்றது. அதற்காகக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்களும், தமிழரின் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்களும் அரசின் ஆதரவுடன் தேர்தலில் கட்சிகளினூடாகவும் சுயேச்சைக் குழுக்களினூடாகவும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சொந்தமான வர்க்குகளைச் சிதறடிப்பதே அவர்களின் நோக்கம். அதற்காகத்தான் அவர்கள் ஊடகவியலாளர் மாநாடுகள் நடத்தியும், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்வுகளில் பங்குபற்றியும், மக்கள் சந்திப்புக்களை நடத்தியும் கூட்டமைப்பினரை விமர்சித்து வருகின்றனர். அவர்களின் விமர்சனங்கள் எமக்குச் சவால்கள் அல்ல. அவை எமக்கான வெற்றிப்படிகள்.

வரித்துக்கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கும் தமிழ் மக்கள் எம்மை அமோக வெற்றியடையச் செய்வார்கள். அதனூடாக எம்மை விமர்சிக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் எமது மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் - என்றார். (ஓ,5,22)

# சிங்கள மக்களுக்காகவே கோத்தா ஜனாதிபதியானார்

## கூட்டமைப்பு மீது சீறுகின்றார் குணதாச

கொழும்பு, ஜூன் 25

பெரும்பான்மையினருக்குத் தேவையானவற்றைச் செய்வதற்காகவே 62 லட்சம் பேர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களித்தனர் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மறந்துவிடக் கூடாது. இலங்கையானது சுயாதீன நாடு என்பதையும் கருத்திற்கொண்டு செயல்படுவதே சிறப்பு என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

கிழக்கு மண்ணில் தமிழர் வரலாற்றை மாற்றியமைக்கும் நோக்கில் ஜனாதிபதி கோத்தாபய தலைமையிலான அரசு, செயலணியொன்றை அமைத்திருக்கும் நிலையில், இந்த விவகாரத்தில் தலையிட்டு எமக்கு உதவவேண்டிய தார்மீக பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தக் கருத்துத் தொடர்பில் தெரிவிக்கையிலேயே கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


இலங்கை இறைமை மிக்க சுயாதீன நாடு. எனவே, இந்தியா மட்டுமல்ல எந்தவொரு நாடும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடமுடியாது. பெரும்பான்மையின மக்களுக்கு தேவையானவற்றை செய்வதற்காகவே 62 லட்சம் பேர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களித்தனர் என்பதை சேனாதிராசா உள்ளிட்டவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் ஜனாதிபதியுடனேயே பேச்சு நடத்த வேண்டும். மாறாக மூன்றாம் தரப்பின் உதவியை கோருவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல- என்றார். (ஓ,ம,44)

# இரு நூல்களின் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 25

அராலியூர் கலாபூஷணம் வி.செல்வரத்தினம் எழுதிய 'சிவபெருமானின் அட்ட வீரத்தலங்கள், மக்கள் மகிழ்ச்சியாக வாழ வழிகாட்டும் மகாபாரத சிந்தனைகள்' ஆகிய இரண்டு நூல்களின் வெளியீடு நூலாசிரியரின இல்லத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி திருமதி நாகராஜேஸ்வரி சிவபாதம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வெளியீட்டுரையை க.மங்களமூர்த்தியும், மதிப்புரையை செல்வி செ.மல்லிகாதேவியும் ஆற்றுவர். (த)





# ஆசி பெற்றார் சரவணபவன்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகியோரைச் சந்தித்து ஆசி பெற்றார். இந்தச் சந்திப்புக்களில் பொதுத்தேர்தல் தொடர்பான விடயங்களும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் பேசப்பட்டது. (எ)

# கருணாவுக்கு வாக்களிப்பதும் விக்கிக்கு வாக்களிப்பதும் ஒன்றே

யாழ்ப்பாணம், ஜூன் 25

ஆயுதப் போராட்டத்தை சின்னாபின்னமாக்கிய துரோகி கருணாவுக்கு வாக்களிப்பதும் அரசியல் பலத்தைச் சின்னாபின்னமாக்கிய துரோகி விக்னேஸ்வரனுக்கு வாக்களிப்பதும் ஒரே முடிவையே தரும் என்று முன்னாள் மாகாணசபை உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் வேட்பாளருமான செ.மயூரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

கருணா அம்மான் போன்ற துரோகிகள் எமது ஆயுதப் போராட்டங்களைச் சின்னாபின்னமாக்கி எமது இருப்பை கேள்விக்குறியாக்கிய நிலையில் எமது அரசியல் ரீதியான போராட்டத்தில் இன்று விக்னேஸ்வரனும் எங்களோடு உடன் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாணசபை உறுப்பினர்களும் அமைச்சர்களும் கருணா அம்மான் செய்த அதே துரோகத்தனத்தையே செய்துகொண்டிருக்கின்றனர்.

நல்லவர் போல வேடமணிந்து முன்னாள் முதலமைச்சர் இன்று எங்களிடம் வாக்குகளைக் கேட்கின்றார். என்னைப் பொறுத்தவரையில் கருணா அம்மானுக்கு வாக்களிப்பதும் விக்னேஸ்வர னுக்கு வாக்களிப்பதும் ஒரே முடிவையே சொல்லும். எங்களைப் பொறுத்தவரையில் எல்லோரும் துரோகிகளே, என்றார். (ஓ,ப,110)

# தேர்தல் முறைப்பாட்டு இலக்கங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில், தேர்தல் விதிமுறை மீறல்கள், தேர்தல் வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடு மேற்கொள்வதற்குரிய தொலைபேசி இலக்கங்கள் மற்றும் தொலைநகல் இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேரடியாக முறைப்பாடு செய்வதற்கு 011 288 6179, 011 288 6421, 011 288 6117 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகத் தொடர்பு கொள்ள முடியும். 011 288 6551, 011 288 6552 என்ற தொலைநகல் இலக்கங்கள் ஊடாகவும் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும்.

071 916 0000 என்ற வட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் ஊடாகவும் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முறைப்பாடுகளை மேற்கொள்ள 021 222 2628 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்க முடியும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 021 390 0151 என்ற தொலைபேசி இலக்கம் அல்லது 021 228 4051 என்ற தொலைநகல் இலக்கம் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

வவுனியா மாவட்டத்தில் 024 222 3100 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்க முடியும்.

மன்னார் மாவட்டத்தில் 023 222 3820 என்ற தொலைபேசி இலக்கம் அல்லது 023 222 3821 என்ற தொலைநகல் இலக்கம் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 021 329 0033 என்ற தொலைபேசி இலக்கம் அல்லது 021 229 0037 என்ற தொலை நகல் இலக்கம் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும். (ஒ,5)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 25
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை வெள்ளிக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி காலை 8 மணியில் இருந்து மாலை 5 மணி வரை **வவுனியா மாவட்டத்தில்** பகல அளுத்வத்த கிராமம், புளிதறித்த புளியங்குளம் கிராமம், செக்கட்டிப்புலவு, கிறிஸ்தவகுளம் ஆகிய இடங்களிலும் மன்னார் மாவட்டத்தில் மாலுவாடி பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# குடு, ஆயுதங்களுடன் முல்லையில் இருவர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 25
**முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மூங்கிலாற்றுப் பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் லவன் குழுப்பைச் சேர்ந்த இருவரை நேற்றுமுன்தினம் சிறப்பு அதிரடிப்படையினர் அதிரடியாகக் கைதுசெய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.**



குறித்த குழுவினர் தொடர்பில் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்துள்ள நிலையில் சிறப்பு அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சட்டவிரோதத்துக்குப் பயன்படுத்தப்படும் பொருள்களுடன் லவன் குழுவைச் சேர்ந்த இருவர் மூங்கிலாறு தேக்கங்காட்டுப்பகுதியில் சமூக விரோத செயற்பாட்டிற்காக நின்றவேளை கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. 19, 31 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.
இரண்டு கிராம் குடு, வாள்போன்ற கம்பி ஒன்று மற்றும் சட்டவிரோத பயன்பாட்டு பொருள்கள் என்பன அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என்று சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட அவர்கள் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ப-19)

# 50 குடும்பங்களுக்கு பளையில் வீட்டு உபகரணம்

பளை, ஜூன் 25
பளை வேம்பொடுகேணி கிராம அலுவலர். பிரிவில் வெடிபொருள்கள் அகற்றப்பட்டு மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மீள் குடியமர்ந்துள்ள 50 குடும்பங்களுக்கு தலா ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான வீட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.
தற்காலிக குடியிருப்புகள் அமைப்பதற்கான சிமெந்து ,மரங்கள், சீமெந்து தூண்கள், சிமெந்துக் கற்கள் உள்ளிட்ட பொருள்களே இவ்வாறு வழங்கப்பட்டன. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்தினர் அந்தப் பொருள்களை வழங்கினர்.
மீளக்குடியமர்ந்து இதுவரை தற்காலிக குடியிருப்புகள் கிடைக்காத 35 குடும்பங்களுக்கு தற்காலிக குடியிருப்புகள் அமைத்து வழங்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்திராபுரம் கிராமத்துக்கான பொது நோக்கு மண்டபம் அமைக்கும் பணிகள் நிறுவனத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேவேளை வேம்பொடுகேணிப் பிரிவில் இந்திராபுரம் கிராமத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த 10 குடும்பங்களுக்கு இந்திய நிறுவனமான றஹமா நிறுவனத்தினால் தற்காலிக குடியிருப்புகள் கிணறுகள், மலகூடங்கள், போன்றனவும், 2019 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் 20 குடும்பங்களுக்கும் தற்காலிக குடியிருப்புகளும் 20 மலகூடங்களும் 6 கிணறுகளும் அமைத்து வழங்கப்பட்டது. அத்துடன் 2020 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த 20 குடும்பங்களுக்கும் இந்திய நிறுவனமான றஹமா நிறுவனத்தினால் தற்காலிக குடியிருப்புகளும் 20 மலகூடங்களும் 6 கிணறுகளும் அமைத்து வழங்கவுள்ளது. (ப-9)



# சட்டவிரோத மணல் அகழ்வு 5 பேர் கைது

கல்முனை, ஜூன் 25
சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து 3 உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டன.
வாழைச்சேனை விசேட அதிரடிப்படைப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அக்குறாணை மாதுறுஓயா ஆற்றுப் பகுதியில் வைத்து இவர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர்.
சந்தேகநபர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார். (ஐ-150)

# சுகாதாரப் பரிசோதகரை தாக்கியவருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஜூன் 25
யாழ்ப்பாணத்தில், குப்பை கொட்ட வந்தவரை தடுக்க முற்பட்ட சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குறித்த நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாண நகர் ஸ்ரான்லி வீதி அத்தியடிச் சந்தியில் குப்பை அதிகளவில் கொட்டப்படுவதால் அதற்கு அண்மித்த இடங்களில் உள்ளவர்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில் அந்த இடத்தில் குப்பை போட வேண்டாம் என்று யாழ்ப்பாண மாநகர சபை அறிவித்தல் பலகை வைத்துள்ளது. எனினும், அதை கவனத்தில்கொள்ளாது, அறிவுறுத்தலை மீறி பலரும் அந்த இடத்தில் தினமும் குப்பை கொட்டுகின்றனர். இத்தகைய அறிவுறுத்தலையும் மீறி குப்பை கொட்டுபவர்கள் சிலர் இனங்காணப்பட்டு அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யும் நடவடிக்கையை அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் மேற்கொண்டு வருகின்றார்.
இதுவரையில் 70க்கும் மேற்பட்டவர்கள் மீது வழக்கு பதிவுசெய்துள்ளார். இந்தநிலையில் அண்மையில் 6332 என்ற இலக்க மோட்டார் சைக்கிளில் வந்தவர் அங்கு குப்பைகளைக் கொட்டியுள்ளார். இதைத் தடுத்து வழக்குத் தாக்கல் செய்ய முற்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சுரேஸ்குமாரை அவர் தாக்கியுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. தாக்குதலில் காயமடைந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்தனர். யாழ் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். வழக்கினை விசாரித்த நீதிவான் எதிராளியை கடுமையாக எச்சரித்ததுடன் நாளை 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு விசாரணையை அன்றைய தினம் ஒத்திவைத்தார். (ப)

# 250 குடும்பங்களுக்கு கொரோனா நிதியுதவி

கொழும்புத்துறை, ஜூன் 25
கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் கொரோனா பேரிடர் கால உதவியாக 4 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி அந்தப் பகுதி மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.
கொழும்புத்துறை ஆனந்தன் வடலி கிராமத்தைச் சேர்ந்த புலம்பெயர் உறவுகள் வழங்கிய நிதியைக் கொண்டு 250க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு குடும்ப அங்கத்தவர் தொகைக்கு ஏற்ப நிதி பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆலய பங்குத் தந்தை அருட்பணி ஜே.நீக்கிலஸ் அடிகள் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி உதவித்தொகை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. சமய வேறுபாட்டின்றி கிராம மக்கள் அனைவருக்கும் உதவி வழங்கப்பட்டதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ப-135)

# லண்டனிலிருந்து 154 பேர் நாட்டுக்கு

கொழும்பு, ஜூன் 25
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இங்கிலாந்தில் சிக்கியிருந்த 154 இலங்கையர்கள் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் இருந்து விசேட விமானம் மூலம் நேற்றுப் புதன்கிழமை நாடு திரும்பினர்.
ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யூ.எல்504 ரக விசேட விமானம் மூலம் நேற்று மதியம் 1.10 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையம் வந்தடைந்தனர் என்று விமான நிலையத் தகவல்கள் தெரிவித்தன.
அனைவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# வீதி மறுசீரமைப்புக்கு உதவிய தனிநபர்

யாழ்ப்பாணம், ஜூன் 25
நுணாவில் மேற்கு தேவாலய வீதியை தனிநபர் ஒருவர் மறுசீரமைப்புச் செய்து மக்கள் பாவனைக்கு வழங்கியுள்ளார்.
நுணாவில் மேற்கு கமக்கார அமைப்பினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, பிரபல ஒப்பந்தக்காரரான ச.இரவீந்திரனே மறுசீரமைப்புச் செய்து வழங்கியுள்ளார்.
நுணாவில் மேற்கு தேவாலய வீதியில், பிள்ளையார் கோவில் தொடங்கி கேரதீவு வீதி வரையும் சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான மறுசீரமைப்புப் பணியைச் செய்துள்ளார். (ஓ.5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பதுங்கிப் பாயும் கொரோனா

இந்த வார முற்பகுதியில் கொரோனா தன் பரவுகையைக் கொஞ்சம் அடக்கியே வாசித்தது. அதிலும் அடுத்தடுத்து இருநாள்கள் எவரும் கொரோனாவால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்படாததால், கொரோனாவை ஒழித்த நாடுகளில் இலங்கையும் இணையப் போவதாகவே பலரும் நம்பிக்கொண்டிருந்தனர். ஆனால் நடந்தோ வேறு. இரண்டுநாள்கள் பதுங்கிய கொரோனா மூன்றாம் நாள் நேற்றுமுன்தினம் 40 கொரோனா நோயாளர்களோடு பாய்ந்தது. நேற்றோடு இலங்கையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2000 த்தை கடந்துள்ளது. ஆக, இன்னமும் இலங்கை கொரோனாவின் ஆபத்து வளையத்தை விட்டு வெளியே வரவில்லை என்பதையே இப்படி இரண்டு நாள்கள் ஒளிந்திருந்துவிட்டு, மூன்றாம் நாளில் 40 நோயாளர்கள் மூலம் கொரோனா வெளிப்பட்டமை சொல்லி நிற்கின்றது.

ஆனாலும் இலங்கையர்களிடையே கொரோனா இன்னமும் அழியாவரத்தோடு உலவிக்கொண்டிருப்பது அச்சத்துக்குரிய விடயமாக பார்க்கப்படும் தன்மை குறைவடையத் தொடங்கியுள்ளது. நாடு வழமைக்குத் திரும்பிவிட்டது. சுகாதார நடைமுறைகள் இறுக்கமாகப் பேணப்பட வேண்டும் என்று அரசு அறிவித்துள்ள போதும், அது கிஞ்சித்தும் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. கோவில்களில் 50 பேருக்கு மேல் வந்துவிடக்கூடாது என்பதில் காட்டும் அக்கறையின் ஒருசதவீத்தைக் கூடப் பொதுபோக்குவரத்துச் சேவைகளில் சுகாதாரத்துறை காட்டவேயில்லை. அதன்விளைவாக இப்போது பஸ்களில் முன்னரைப்போல கால்வைக்கக் கூட இடமில்லாதவகையில் பயணிகளை அடைத்துக் கொண்டு செல்லும் பழைய கலாசாரம் மீண்டுள்ளது. என்னதான் முகக்கவசம் போட்டாலும் , இப்படி கட்டிப்பிடிப்பது போல நெருக்கமாக பயணிகள் ஏற்றப்பட்டால் கொரோனா தொற்றாமல், கை கட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்குமா என்ன? இவையெல்லாம் நன்றாகத் தெரிந்தும் சுகாதாரத்துறை கண்டுகொள்வதேயில்லை. அவர்கள் எந்தக் கோயிலில் எப்போது கொடியேற்றம், அங்கு பக்தர்கள் வராமலிருக்க என்னென்ன தடைகளைப் போடலாம் என்று திட்டமிடுவதில்தான் பிஸியாக கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

உண்மையில் கொரோனாவை ஒழிப்பதென்பது அவ்வளவு சுலபமில்லை. இது அரசுக்கும் நன்கு தெரியும். அதனால் தான் கொரோனாவின் ஆரம்பக் காலங்களில் காட்டிய பதற்றத்தையும், கட்டுப்பாடுகளையும் இப்போது அரசு தளர்த்தியுள்ளது. இருப்பினும் இந்தத் தளர்வு கூட ஆரோக்கியமல்ல. ஒரு கட்டத்தில் ஓரிரண்டு வாரங்கள் கூட கொரோனாவின் தலைக்கறுப்பைக் காணாவிட்டாலும் கூட,நாம் சந்தோஷப்பட முடியாது. ஏனெனில் இப்படித்தான் சீனாவும், நியூசிலாந்தும் கொரோனாவை ஒழித்துக் கட்டிவிட்டதாகப் பெருமையோடு அறிவித்த அடுத்தடுத்த வாரங்களிலேயே அங்கு கொரோனாவின் இரண்டாம் அலையடிக்க ஆரம்பித்துள்ளது. ஏனெனில் கொரோனா ஒழிந்துவிட்டதாக நினைத்து, சுகாதார நடைமுறைகளை அந்த நாடுகள் தளர்த்தியமையே இந்த நிலைக்குக்காரணம். கொரோனா நம்மிடையே இன்னும் கொலைவெறியோடு உலாவிக் கொண்டிருக்கின்றது என்ற முன்னெச்சரிக்கையோடு இருப்பது, ஓரளவுக்குப் பாதுகாப்பானதே. ஆனால் தேர்தலுக்கு மக்களை வாக்களிக்க வரச்செய்வதற்காக கொரோனா அபாயம் நம்மைவிட்டுக் கடந்துவிட்டது என்ற மாயையைத் தோற்றுவிப்பது , கட்டுப்படுத்தமுடியாத வீரியத்தோடு கொரோனாவின் இரண்டாம் அலை வீசியடிக்க வழிகோலிவிடும்.

கொரோனாவைத் தடுக்க வேண்டுமாயின், அர்ப்பணிப்பான சேவையும், மக்களிடையேயான விழிப்புணர்வும், சுகாதார நடைமுறைகள் குறித்த தெளிவும் அவசியம். இந்தச் சேவையும், விழிப்புணர்வும், தெளிவும் நாட்டில் உள்ள ஒவ்வொருவரிடமும் இயல்பாக ஏற்படுத்தப்பட வேண்டும். அதை ஏற்படுத்திவிட்டால், எப்படி கொரோனா அழியாவரம் பெற்ற அரக்கன் போல நீடித்திருக்கிறதோ,அதற்கு நிகராக கொரோனாவைத் தடுக்கும் நடைமுறைகளும் ஒவ்வொருவரிடம் அழியாமல் நிலைத்திருக்கும். அதுவே இப்போதைக்குள்ள கொரோனாவை ஒழிப்பதற்காக நம்மிடமுள்ள ஒரேயொரு பொறிமுறை.

# விமல், கம்மன்பில பரப்புரைக்கு வலுச்சேர்க்கவே கருணா முயற்சி!

### முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 25

அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் உதய கம்பன்பில உள்ளிட்ட இனவாதத்தை மூலதனமா கக் கொண்டு அரசியல் நடத்துபவர்களின் தேர்தல் பிரசாரத்துக்கு வலுசேர்க்கும் விதமாகவே கருணா அம்மான் கருத்து வெளியிட்டிருக்கிறார் என ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய கொழும்பு தேசிய அமைப்பாளரும் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான முஜிபுர் ரஹ்மான் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கருணா அம்மானுக்கும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் தொடர்பில்லை என்று கட்சியின் பொதுச் செயலாளர் அறிவித்திருக்கிறார். இது ஒரு ஏமாற்றுப் பேச்சாகும். கருணா அம்மான் கடந்த காலங்களிலே யாருடன் இணைந்து செயற்பட்டார் என்பது முழு நாடும் அறிந்ததே. கருணாவுக்கு ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பிரதி அமைச்சர் பதவிகூட வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனக்கு அழைப்பு விடுத்ததாகவும், இருமுறை தேசியப்பட்டியலில் சந்தர்ப்பம் கொடுத்ததினால், இம்முறை தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று வருவதாக மகிந்தவுக்கு அறிவித்ததாகவும் கருணாவே கூறியுள்ளார். இவ்வாறான ஒரு நிலையில் பொதுஜன பெரமுனவுக்கும், கருணாவுக்கும் இடையில் தொடர்பில்லை என்று கூறுவதை எவ்வாறு ஏற்றுக் கொள்வது?

ஆளும் தரப்பிலிருக்கும் விமல் வீரவன்ச , உதய கம்மன்பில உள்ளிட்ட பேரினவாதிகள் தெற்கில் சிங்கள மக்கள் முன்னிலையில் எவ்வாறு இனவாத அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்களோ? அதனைப் போன்றுதான் கருணாவும் கிழக்கில் தமிழ் மக்கள் முன்னிலையில் இந்த இனவாத அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளார். இதுவும் அரசாங்கத்தின் அரசியல் இலாபம் கருதிய ஒரு நோக்கமாக இருக்கலாம். கிழக்கில் கருணாவை பயன்படுத்தி வாக்குகளை அதிகரிப்பதுடன், கருணாவின் கருத்தைக் காரணங்காட்டி தெற்கிலும் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான திட்டமாகவும் இது இருக்கலாம். இவர்கள் மூவருமே ஓர் அணியிலேயே செயற்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றே இவர்களது செயற்பாடுகள் அமையப்பெற்றுள்ளன - என்றார். (ப)

## சம்பிக்கவுக்கு எதிராக குற்றப் பத்திரிகை

2016 ஆம் ஆண்டு ராஜகிரிய பிரதேசத்தில் வாகன விபத்தொன்றில் இளைஞர் ஒருவரைப் படுகாயமடையச் செய்த சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் வெலிகடை பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி, தற்போதைய உதவி பொலிஸ் பரிசோதகர் சுதத் அஸ்மடல ஆகியவர்களுக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றில் தனித்தனியாகக் குற்றப்பத்திரிக்கைகளைத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சட்டமா அதிபர் கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

குறித்த வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் காஞ்சனா நெரஞ்சனி சில்வா முன்னிலையில் நேற்று புதன்கிழமை அழைக்கப்பட்ட போது சட்டமா அதிபர் சார்பாக முன்னிலையான பிரதி சொலிசிட்டர் நாயகம் திலீப பீரிஸினால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்று சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட கொழும்பு குற்றவியல் பிரிவின் அதிகாரிகள் நீதிமன்றில் அறிவித்தனர்.

ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த விசாரணைக் கோப்புகள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

இதன்போது, சட்டமா அதிபர் சார்பாக முன்னிலையான பிரதி சொலிசிட்டர் நாயகம் திலீப பீரிஸ் நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்து, இந்த வழக்கின் சந்தேகநபர்களாகப் பெயரிடப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் வெலிகடை பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சுதத் அஸ்மடல ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றில் தனித்தனியாக குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவித்தார்.

வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்ட நீதிவான், அன்று வழக்கின் முன்னேற்ற அறிக்கையைத் தாக்கல் செய்யுமாறு அரச பிரதி சொலிசிட்டர் நாயகத்துக்கு உத்தரவிட்டார். (க)

## கொவிட் நிதியத்தில் 1,392 மில்லியன் ரூபா

கொழும்பு, ஜூன் 25

தனிப்பட்ட நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் கொவிட் - 19 சுகாதார சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 1,392 மில்லியனாக அதிகரித்துள்ளது.

மல்வத்துபீடத்தின் அனுநாயக்க தேரர் பேராசிரியர் சங்கைக்குரிய நியங்கொட விஜித்தசிறி ஒரு லட்சத்து 92 ஆயித்து 516 ரூபாவையும், மெதிரிகிரிய பௌத்த மத்திய நிலையத்தின் தலைவர் சங்கைக்குரிய மெதிரிகிரியே அஸ்ஸஜி தேரர் ஒரு லட்சம் ரூபாவையும், கல்வி அமைச்சின் பிரிவெனா கல்விப் பிரிவு 44 லட்சத்து 84 ஆயிரத்து 500 ரூபாவையும் கொவிட் நிதியத்துக்காக ஜனாதிபதியிடம் கையளித்துள்ளனர்.

இந்த நன்கொடைகள் மற்றும் ஏனைய நன்கொடைகளுடன் தற்போது கொவிட் 19 சுகாதார, பாதுகாப்பு நிதியத்தின் மீதி ஆயிரத்து 392 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இந்த நிதியத்துக்கு நன்கொடைகளை வழங்குகின்றனர்.

காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமும் www.itukama.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது #207# என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு பங்களிப்பை செய்ய முடியும். மேலதிக விவரங்களை0760700700/0112320880/0112354340/0112424 012 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் - என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சுகாதார நடைமுறையை மீறிய சவேந்திர சில்வா!

முல்லைத்தீவு, ஜூன் 25

**கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு எதிரான ஜனாதிபதி செயலணியின் தலைவராக இருக்கும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா தனது பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது, சுகாதார விதி முறைகளை மீறியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.**



இராணுவத் தலைமையகத்தில் முதன்மைத் தலைமை அதிகாரிகளின் ஏற்பாட்டில், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றுமுன்தினம் தனது 56 ஆவது பிறந்த நாளை கேக் வெட்டி கொண்டாடியுள்ளார்.

இந்த நிகழ்வில் இராணுவத் தலைமையகத்தின் உயர்மட்டத் தளபதிகளான, மேஜர் ஜெனரல்கள் பங்குபற்றியிருந்தனர். எனினும் அவர்கள் கொரோனாத் தொற்று தொடர்பான சுகாதார வழிகாட்டு முறைகளைப் பின்பற்றவில்லை என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

இராணுவத் தளபதியின் பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது, உயர்மட்ட படைத் தளபதிகள் முகக் கவசங்களை அணியவில்லை என்பதுடன், சமூக இடைவெளியையும் பேணவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு எதிரான ஜனாதிபதி செயலணியின் தலைவராக இருக்கும் இராணுவத் தளபதியே , அதனைத் தடுப்பதற்கான சுகாதார வழிகாட்டுமுறைகளைப் பின்பற்றாமல் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளதாக கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. (ப)



# அந்தோனிபுரத்தில் பொலிஸ் நடமாடும் பிரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 25

பொலிஸ் நிலைய சேவைகளை மக்கள் பெற்றுக்கொள்ள வசதியாக உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே வளலாய் அந்தோனிபுரத்தில் தற்காலிகமாக நடமாடும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் வழிகாட்டலில், பலாலி பொலிஸ் நிலைய நடமாடும் பொலிஸ் பிரிவு என்ற திட்டத்தின் கீழ் பொலிஸ் பலாலி பொறுப்பதிகாரி சஞ்சீவ்வின் பொறுப்பில் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பலாலி பொலிஸ் நிலையம் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ளது. அதனால் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் அச்சுவேலி, காங்கேசன்துறை மற்றும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் சேவைகளைப் பெற்று வந்தனர்.

இந்த நிலையில் பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்ற விடயம் காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அதனையடுத்து பலாலி பொலிஸ் நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படும் வரை பலாலி வளலாய் அந்தோனிபுரத்தில் நடமாடும் பொலிஸ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவு 24 மணித்தியாலங்களும் சேவையை வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இன்றிலிருந்து மக்கள் தமது முறைப்பாடுகளை இங்கு முறையிடமுடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க)

# நிகழ்வுகளில் பங்கேற்க 200 பேருக்கு அனுமதி?

கொழும்பு,ஜூன் 25

திருமண வைபவங்கள் உள்ளிட்ட ஏனைய நிகழ்வுகளில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கையை 200 ஆக அதிகரிப்பது தொடர்பில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது என்று கைத்தொழில் ஏற்றுமதி, முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பான முன்மொழிவு, கொவிட்19 ஐ கட்டுப்படுத்துவதற்கான ஜனாதிபதி செயலணிக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அகில இலங்கை நிகழ்வு மண்டபங்கள் மற்றும் உணவு விநியோகஸ்தர்கள் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

கொவிட்19 தொற்றுநோய் காரணமாக திருமண வைபவம் உள்ளிட்ட பிற நிகழ்வுகளில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை 100 ஆக இதுவரையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை போதாது என்று குறித்த சங்கத்தின் பிரதிநிதிகள் கூட்டத்தில் சுட்டிக்காட்டினர். அதனையடுத்து இது குறித்து ஆராயப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# பி.சி.ஆர். பரிசோதனைகள் ஒரு லட்சத்தை தொட்டது

கொழும்பு,ஜூன் 25



இலங்கையில் இதுவரை ஒரு இலட்சம் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இதுவரை ஆயிரத்து 991பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களில் 29 பேர் இந்தியாவின் மும்பையில் இருந்து வந்தவர்கள். ஏனைய 11 பேரும் அமெரிக்காவில் இருந்து வருகை தந்தவர்கள் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் 22 பேர் பூரணமாகக் குணமடைந்துள்ளனர்.

ஐ.டி.எச்., வெலிகந்த, காத்தான்குடி, ஹோமாகம மற்றும் தெல்தெனிய ஆகிய மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்த தொற்றாளர்கள் சிலரே இவ்வாறு குணமடைந்து வெளியேறியுள்ளனர் என்று தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரை ஆயிரத்து 548 பேர் பூரணமாக குணமடைந்து வெளியேறியுள்ளனர்.

மேலும் 432 பேர் வைத்திய கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு தெரிவித்துள்ளது. (க)

# பிறப்பு, திருமணச் சான்றிதழ் பதிவதற்கு தொடர்புகொள்க

சாவகச்சேரி, ஜூன் 25

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் இதுவரை பிறப்புச் சான்றிதழ் மற்றும் திருமணச் சான்றிதழ் பதிவு செய்யாத 50 வயதுக்கு உட்பட்டவர்கள் யாராவது இருப்பின் இன்று வியாழக்கிழமை தொடர்புகொள்ளுமாறு கிராம அலுவலர் க.கார்த்திகேயன் அறிவித்துள்ளார்.

அத்துடன் தொலைந்த தேசிய அடையாள அட்டை மற்றும் முதற் தடவையாக தேசிய அடையாள அட்டை பெறுவோர்களுக்கு மட்டும் விசேடமாகப் பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேசிய அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள் மற்றும் முதற் தடவையாக விண்ணப்பம் செய்வோரும் இன்று தொடர்புகொள்ளுமாறும் கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (பு-9)

# பாக். கிரிக்கெட் வீரர்கள் 10 பேருக்கு கொரோனா!

இஸ்லாமபாத், ஜூன் 25

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் 10 வீரர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் இங்கிலாந்து - பாகிஸ்தான் இடையில் கிரிக்கெட் தொடரை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதையடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்குக் கொரோனாச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் நேற்று மாலை வரையான நிலைவரத்தின்படி 10 வீரர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சகலதுறை வீரர் மொகமட் ஹபீஸ், வேகப்பந்து வீச்சாளர் வஹாப் ரியாஸ், புதுமுக வீரரான ஹைதர் அலி, சுழற்பந்து வீச்சாளர் ஷடப் கான் மற்றும் பஹார் ஜமான், முகமது ரிஸ்வான், ஹாரிஸ் ரவுப், ஹாஷிப் பாட்டி, முகமது ஹஸ்னைன், இம்ரான் கான் ஆகியோருக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்

# விளக்கமறியல் கைதி தூக்கிட்டு தற்கொலை

கொழும்பு, ஜூன் 25

மொனராகலவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

குறித்த கைதி கடந்த காலங்களிலும் இவ்வாறு பலமுறை தற்கொலை செய்துகொள்ள முயன்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் மொனராகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

### லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில்

# மனோ கணேசனுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு,ஜூன் 25

நல்லாட்சி அரசில் தேசிய மொழி பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்ற மோசடிகள் தொடர்பில் அதன் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ஹேரத் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளார்.

முன்னாள் அரச கரும மொழிகள் அமைச்சரான மனோ கணேஷன் மற்றும் அவரது பிரத்தியேகச் செயலாளர் ஆகியோருக்கு எதிராக இவ்வாறு முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடளித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த பணிப்பாளர் நாயகம் பிரசாத் ஹேரத்,தமிழ் மக்களுக்காக முன்னிலையாவதாகக் குறிப்பிட்டு அமைச்சர் மனோ கணேசன் இனவாதச் செயற்பாடுகளையே முன்னெடுத்தார்.

அது மாத்திரமின்றி ஜனாதிபதித் தேர்தலின்போது ஆயிரத்து 300 இளைஞர்களுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்குவதாகக் கூறி, நான் இல்லாத போது எனது அலுவலகத்துக்கு வருகை தந்து எனது கையெழுத்துடனான கடிதத்தைத் தயாரித்து இளைஞர்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளார்.

ஆயிரத்து 300 பேரையும் பயிற்றுவிப்பதற்காக செலவிடப்பட்ட 55 மில்லியன் ரூபா கடன் தொகையாகும். இதற்கு தற்போது நாமே பொறுப்புக்கூற வேண்டியேற்பட்டுள்ளது.

எனவே இந்த பயிற்சி வேலைத்திட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க முடியாது. எமது பிரதான பொறுப்பு நாட்டில் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதாகும்.

2008 முதல் 2015 வரை இதற்கான நடவடிக்கைகளை நாம் முறையாக முன்னெடுத்தோம். எனினும் நல்லாட்சி அரசின் ஆட்சியில் எம்மால் அவ்வாறு செயற்பட முடியாமல் போனது.

எம்மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. பயிற்சியின்போது அதில் கலந்து கொண்டவர்களுக்கு உணவளிக்கப்பட்டமை அமைச்சரது பிரத்தியேக செயலாளரின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே முன்னெடுக்கப்பட்டது. இவை தொடர்பில் நாம் லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் தெரியப்படுத்தியுள்ளோம் - என்றார். (க)





# செயற்றிட்ட உதவியாளர்களுக்கு நியமனம் வழங்கக் கோரிக்கை

வவுனியா,ஜூன் 25

**தமது நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருவதாக வவுனியா மாவட்ட செயற்றிட்ட உதவியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவைத் தொடர்ந்து, வவுனியாவிலும், செயற்றிட்ட உதவியாளர்கள் மாவட்டச் செயலருக்கு நேற்று கடிதம் ஒன்றைக் கையளித்தனர்.**

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்கள்-

தேர்தல் ஆணையத்தின் தலைவரால் மேற்கண்ட நியமனத்தை மீட்டெடுக்க தொடர்ந்து வலியுறுத்தப்பட்ட போதிலும், இது தொடர்பாக இதுவரை எந்த தகவலும் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கவில்லை. சுமார் எட்டு மாதங்களாக நாங்கள் வேலையில்லாமல் இருக்கிறோம். இதன் விளைவாக, நாமும் எங்கள் குடும்ப உறுப்பினர்களும் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம், வாழ்வாதார இழப்புக் காரணமாகக் கடுமையான துயரங்களுக்கு ஆளாகியுள்ளோம். ஆகையால், எங்கள் குறைகளை தயவு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்வதோடு, எமது செயற்றிட்ட உதவியாளர் நியமனம் குறித்து ஆவன செய்யும் படி, வவுனியா மாவட்ட செயற்றிட்ட உதவியாளர்கள் சார்பில் ஜனாதிபதி, பிரதமருக்கான கடிதங்களை வவுனியா மாவட்டச் செயலரிடம் கையளித்துள்ளோம் - என்றனர். (ஜ-110)

## வடிகால் துப்புரவு

குருநகர், ஜூன் 25

குருநகர் பகுதியில் உள்ள கழிவு நீர் செல்லும் வடிகால்கள் யாழ்ப்பாண மாநகர சுத்திகரிப்புப் பகுதியால் கடந்த சில நாள்களாகத் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

குருநகர் கடற்கரை வீதி, குருநகர் மவுன்காமல் வீதி ஆகியவைகளில் அமைந்துள்ள கழிவு நீர் செல்லும் வடிகால்களில் தேங்கிக் கிடந்த சேற்றுமண் இவர்களால் அள்ளப்பட்டு வீதியோரங்களில் குவிக்கப்பட்டுள்ளன. (ஜ-51)

# தரிஷா பஸ்டியனின் பாதுகாப்பை இலங்கை உறுதிசெய்ய வேண்டும்

### *மனித உரிமை அமைப்புகள் கூட்டாக வலியுறுத்து*

கொழும்பு, ஜூன் 25

ஊடகவியலாளரும் மனித உரிமைப் பாதுகாவலருமான தரிஷா பஸ்டியனின் பாதுகாப்பை இலங்கை உறுதிசெய்ய வேண்டும் என மனித உரிமை அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு, எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு, சர்வதேச மன்னிப்புச்சபை, சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், உட்பட ஐந்து அமைப்புகளே இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளன.

தரிஷா பஸ்டியனிற்கு எதிரான நடவடிக்கைகள் மனித உரிமைகள் மற்றும் ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதல் என குறிப்பிட்டுள்ள இந்த அமைப்புகள், தரிஷா பஸ்டியனை துன்புறுத்துவதை நிறுத்தி அவரது பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன.

சுவிஸ் தூதரக பணியாளர் கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகதெரிவிக்கும்விசாரணைகளில் சி.ஐ.டியினர் தரிஷா பஸ்டியனை தொடர்ந்து இலக்குவைக்கின்றனர் என சர்வதேச அமைப்புகள் தெரிவித்துள்ளன. இந்தச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் டிசம்பர் 2019 முதல் சி.ஐ.டியினர் தரிஷா பஸ்டியனையும் வேறு பலரையும் சுவிஸ் தூதரகப் பணியாளரின் போலியான குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணையில் தொடர்புபடுத்த முயன்றுள்ளனர் எனத் தெரிவித்துள்ள சர்வதேச அமைப்புகள், சதி முயற்சி இடம்பெற்றதாக காண்பிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன போல தோன்றுகின்றது எனத் தெரிவித்துள்ளன.

தரிஷா பஸ்டியன் அரசாங்கத்தின் சண்டே ஒப்சேவரின் ஆசிரியராகப் பணியாற்றியவர். நியூயோர்க் டைம்சிற்கும் பங்களிப்புச் செய்பவர். மனித உரிமைகள், இராணுவ மயமாக்கல், ஊழல், மத சுதந்திரம், ஜனநாயகம் அரசியல் உரிமைகள் போன்ற இலங்கையுடன் தொடர்புபட்ட விடயங்கள் குறித்து எழுதியுள்ளார் என தெரிவித்துள்ள சர்வதேச அமைப்புகள், அவரது எழுத்துகள் தொடர்ச்சியாக ஆட்சியாளர்களினால் இலக்குவைக்கப்படும் மக்களின் போராட்டங்களை வெளிக் கொண்டுவந்துள்ளன என தெரிவித்துள்ளன. (ப)

# மருத்துவமனை ஆளணியை அதிகரிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்



களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரி மருத்துவமனை முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மருத்துவமனை நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. நலன்புரிச் சங்கத்தினர், நோயாளிகள் மற்றும் சமூக நலன் விரும்பிகள் உட்பட பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

'எமது மருத்துவர்களைக் காப்பாற்றுவோம், மருத்துவர்களுக்கான தட்டுப்பாட்டால் நோயாளருக்கான சிகிச்சை தாமதம், மருத்துவர்களின் இடமாற்றத்தில் அரசியலைத் திணிக்காதே' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

அங்கு ஆர்ப்பாட்டத்தின்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மருத்துவமனை நலன்புரிச் சங்கத்தினர் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியிலுள்ள சுமார் ஒரு இலட்சம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய இந்த மருத்துவமனையில் ஆளணிப் பற்றாக்குறை தொடர்ச்சியாக நிலவி வருகின்றது.

மருத்துவமனை தரமுயர்த்தப்பட்டாலும் இங்கு ஆளணிப்பற்றாக்குறை நிலவி வருகின்றது. 51 மருத்துவர்கள் பணிபுரிய வேண்டிய இடத்தில் 14 மருத்துவர்கள் மாத்திரம் கடமை புரிகின்றனர். 2 விஷேட மருத்துவர்கள் மாத்திரமே உள்ளனர். இங்கு கடமைக்காக வரும் மருத்துவர்கள் குறுகிய காலத்தில் இடமாற்றம் பெற்றுச்செல்வது இங்குள்ள நோயாளர்களுக்கு பலத்த ஏமாற்றமாக இருக்கிறது.

இங்கு சிகிச்சையை எதிர்பார்த்து வரும் மக்கள் இங்கு நிலவும் வைத்திய ஆளணிப் பற்றாக்குறை காரணமாக மட்டக்களப்பு, கல்முனை போன்ற தூர இடங்களுக்கு சிகிச்சைக்காகச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இக்குறைபாடு உடனடியாக நிவர்த்திக்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை- என்றனர். (ஜ)

2011 உலகக் கிண்ணத்தில் ஆட்டநிர்ணயம்

# 90 நாள்களுக்குள் அறிக்கை கோருகிறார் மஹிந்தானந்த

## 24 காரணிகளை வெளிப்படுத்தி நேற்று வாக்குமூலம்



கொழும்பு, ஜூன் 25

**'2011ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில் ஆட்டநிர்ணயச் சதி இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடமும், விளையாட்டுத்துறை அமைச்சரிடமும் கேட்டுக்கொள்கின்றேன்' என்று முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கோரிக்கைவிடுத்துள்ளார்.**

2011ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் ஆட்டநிர்ணய சதி இடம்பெற்றுள்ளது என அப்போது விளையாட்டுத்துறை அமைச்சராக பதவி வகித்த மஹிந்தானந்த அளுத்கமகே வெளியிட்ட கருத்தானது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இதையடுத்து சிறப்புப் பொலிஸ் குழு மஹிந்தானந்தவிடம் இன்று வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டது. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: '2011ஆம் ஆண்டில் நடைபெற்ற இறுதியாட்டத்தைக் கண்காணிப்பதற்கு நானும் சென்றிருந்தேன். எமது அணி தோல்வியடைந்தமை தொடர்பில் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. அதன்பின்னர் பல தரப்புகளும் என்னிடம் முறைப்பாடுகளை முன்வைத்தன. இவ்விவகாரம் தொடர்பில் இதற்கு முன்னரும் கருத்துகளை வெளியிட்டுள்ளேன். ஆனால், இம்முறைதான் அது பேசுபொருள் ஆகியுள்ளது.

ஆட்டநிர்ணய சதி இடம்பெற்றிருக்கலாம் என்பதற்கான 24 காரணிகளை பொலிஸ் விசேட பிரிவினரிடம் வழங்கியுள்ளேன். ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. விசாரணைகள் இடம்பெறுகின்றமையால் அவை எவை என்று என்னால் குறிப்பிடமுடியாது. எனவே, இந்த விடயத்தை அரசியலாக்காமல் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன். விசாரணைகள் முடிவடையும்வரை இது பற்றி கருத்து வெளியிடுவதை நிறுத்திக் கொள்வோம். விசாரணைகளை துரிதப்படுத்தி மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடமும், விளையாட்டுத்துறை அமைச்சரிடமும் கேட்டுக்கொள்கின்றேன்' - என்றார். (ம-44)


## மீனவர்களின் "பாடுகள்" தனிநபரால் அபகரிப்பு

### கச்சாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

நீண்டகாலம் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட கச்சாய் கடற்றொழிலாளர்களின் பாடுகள் தனியார் ஒருவரால் அபகரிக்கப்பட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

"இறால் அறுவடை செய்யும் தொழிலாளர்களின் "பாடு" பகுதியை தனியார் ஒருவர் அத்துமீறி அபகரித்து வைத்துள்ளதால் அந்தப் பகுதியில் நாம் எமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதுள்ளது. எமது குடும்ப வருமானம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. குறித்த நபரால் அபகரிக்கப்பட்டுள்ள எமது பாடுகளை மீளவும் பெற்றுத்தருவதுடன் அவரது அத்து மீறல் செயற்பாட்டையும் தடுத்து நிறுத்தி நியாயம் பெற்றுத் தரவேண்டும்" என்று மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப)



## 3 நாள்களுக்கு விசேட டெங்கு ஒழிப்பு திட்டம்!

கொழும்பு, ஜூன் 25

விசேட டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் இன்று முதல் எதிர்வரும் 3 நாள்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கண்டி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் நிர்மாணப் பணிகள் இடம்பெறும் பகுதிகளை அண்மித்த இடங்களில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (எ-ரி)

## ஆயிரம் மீற்றருக்கு அப்பால் தொழில்!

### குருநகர் மீனவர்களுக்கு அறிவுறுத்து

குருநகர், ஜூன் 25

குருநகரில் இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிக்கும் மீனவர்களை அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவை அண்டிய கடற்பகுதிகளில் தொழில் செய்யவேண்டாம் என குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனலைதீவு, நெடுந்தீவு, நயினைதீவை அண்டிய கடற்பரப்பில் குருநகர் மீனவர்கள் இழுவைப் படகு தொழில் செய்வதால் தமது மீன்பிடித் தொழில் பாதிக்கப்படுகின்றது என்று அந்தப் பிரதேச மீனவர் சங்கங்களால் தமக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், இந்தக் கடற்பரப்பில் ஆயிரம் மீற்றருக்கு அப்பால் தொழில் செய்யுமாறும் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (ஐ-51)

## இடிந்து விழும் நிலையில் மதில்

கொழும்புத்துறை, ஜூன் 25

அரியாலை ஜே/95 கிராம அலுவலர் பிரிவில் ஆனந்தன் வடலி வீதியும் திருமகள் வீதியும் இணையும் சந்திப் பகுதியில் உள்ள மதிற்சுவர் சேதமடைந்து உடைந்து விழும் நிலையில் காணப்படுவதால் அந்த வீதியால் செல்லும் மக்கள் அச்சத்துடன் பயணிப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

அந்த வெற்றுக்காணி உரிமையாளர் பாராமுகமாய் இருக்கின்றமையால் அதனை அகற்ற முடியாதுள்ளதாகவும் எந்தநேரமும் இடிந்து விழுந்து ஆபத்தை ஏற்படுத்தலாம் எனவும் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (ப-135)

## அந்தோனியார் வழிபாட்டிடத்தை அழித்த மணல் கடத்தல் டிராக்டர்

### கொழும்புத்துறையில் சம்பவம்

கொழும்புத்துறை, ஜூன் 25

கொழும்புத்துறை ஆனந்த வடலிப் பகுதியில் தனியார் காணியில் அமைந்திருந்த புனித அந்தோனியார் வழிபாட்டிடம் சட்டவிரோத மணல் கடத்தல் வாகனம் மோதியதில் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

புனித அந்தோனியார் சொரூபமும் கட்டடமும் இடிந்து வீழ்ந்துள்ளன. அரியாலைப் பகுதியிலிருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தை இராணுவத்தினர் துரத்தி வந்தபோது வேகமாக வந்த உழவு இயந்திரம் கட்டுப்பாட்டை இழந்து வழிபாட்டிடத்தை மோதி இடித்து வீழ்த்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் தொடர்ந்து துரத்திச் சென்றபோதும் மண் கடத்தல்காரர் 'டிமிக்கி' கொடுத்து விட்டுத் தப்பிச் சென்றனர் என்று கூறப்படுகிறது. இது தொடர்பில் வழிபாட்டிடத்தின் பராமரிப்பாளர் யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ப-135)

## கடற்றொழிலுக்கு செல்லவேண்டாம்

குருநகர், ஜூன் 25

நாட்டில் உருவாகியுள்ள சீரற்ற காலநிலை காரணமாக குருநகரில் கடற்றொழிலை மேற்கொள்ளும் அனைத்துக் கடற்றொழிலாளர்களையும் கடற்றொழிலுக்குச் செல்லவேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தால் நேற்றுமுன்தினம் காலை ஒலிபெருக்கி மூலம் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. (ஐ-51)

## மூவருக்கு மறியல்

முல்லைத்தீவு, ஜூன் 25

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு, தண்ணீரூற்றுப் பகுதியில் 250 கிராம் கஞ்சாவுடன் இருவரும் கிச்சிராபுரம் பகுதியில் கத்தியைக் காட்டி சங்கிலி அறுப்பில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரும் முள்ளியவளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் நேற்று முல்லைத்தீவு, மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ப-19)

# இலங்கையில் கொரோனா பரவுவதற்கு ஏதுநிலைகள்

## ஜனாதிபதி கோத்தாபய எச்சரிக்கை



**கொழும்பு, ஜூன் 25**
**இலங்கையில் மீண்டும் கொரோனா பரவும் ஆபத்துக்கள் உள்ளன என்று எச்சரித்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ.**

தனது பேஸ்புக் பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார். அந்தப் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
'உலகின் அனைத்து நாடுகளும் நோய்த் தொற்றால் அவதியுறும் நிலையில், எமது நாடு அனைவரினதும் ஒன்றிணைந்த முயற்சியினால் குறிப்பிடத்தக்க வகையில் இந்தப் போராட்டத்தில் வெற்றி கண்டுள்ளது. இருந்த போதிலும் கொரோனா நோய்த் தொற்றானது முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும். கவனயீனமான செயற்பாடுகள் நோய்த்தொற்றை மீண்டும் பரப்பக்கூடும். எனவே, சுகாதாரத் துறை மற்றும் அரசால் எடுக்கப்படும் நடவடிக்கைகளை முற்றாகப் பின்பற்றுமாறு அனைத்து இலங்கையர்களையும் நான் வேண்டிக்கொள்கின்றேன்' என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

---

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# ஹரின் பெர்னாண்டோவை கைதுசெய்ய வேண்டும்!

## விஜயதாச ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 25
ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவை கைது செய்ய வேண்டுமென முன்னாள் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மேற்படி தாக்குதல் தொடர்பில் அறிந்திருந்தும் அதனை வெளிப்படுத்தாத அவரை மனிதப் படுகொலை குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
நாட்டில் அனைத்து இன, மத மக்களினதும் பௌத்த தேரர்களினதும் கௌரவத்திற்கும் அபிமானத்துக்கும் உரியவராக பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை திகழ்கிறார். மேற்படி தாக்குதல் தொடர்பில் தமது தந்தையார் தெரிவித்திருந்தும் அதனை வெளிப்படுத்தாது தாம் அன்று ஆலயத்திற்குச் செல்லவில்லை என ஹரின் பெர்னாண்டோ தெரிவித்திருந்தார். தம்மைப் பாதுகாத்துக்கொண்டு கத்தோலிக்க மக்களுக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை என்ற தோரணையில் அவர் நடந்து கொண்டமையையும் கருத்து வெளியிட்டமையையும் எவ்வாறு ஏற்க முடியும்? - என்றார். (ம)

---

# ஹெரோய்னுடன் ஆசிரியை கைது

கொழும்பு, ஜூன் 25
ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆசிரியை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கொழும்பு பிரபல சர்வதேச பாடசாலை ஒன்றின் ஆசிரியை எனத் தெரிவிக்கப்பட்டது. கண்டி தங்கொல்ல பகுதியில் வைத்து கண்டிப் பொலிஸாரால் இவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

---

# அறிகுறிகள் இல்லாத தொற்றாளரால் கொரோனா வைரஸ் பல்கிப்பெருகும்

## *சீன ஆய்வில் தகவல்*

வுகான், ஜூன் 25
அறிகுறிகள் இல்லாத கொரோனா நோயாளிகள், அறிகுறிகள் காணப்படும் நோயாளிகளைவிடக் கூடுதல் காலத்துக்கு வைரஸைப் பரப்பக் கூடும் என்று அண்மையில் சீன ஆய்வில் தெரியவந்துள்ளது.
அத்தகையோரால் வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக சொன்குயின் மருத்துவப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
அறிகுறிகள் காணப்படாத நோயாளிகள் சுமார் 19 நாள்களுக்கு நோயைப் பரப்பும் ஆற்றல் கொண்டுள்ளனர். அறிகுறிகள் உள்ளவர்களுடன் ஒப்பிட்டால் அது மூன்றில் ஒரு பங்கு அதிகம். நோய்க்கான அறிகுறிகள் இல்லாதோரிடம் நோய் எதிர்ப்புப் புரதங்கள், அறிகுறிகள் உள்ளவர்களைக் காட்டிலும் குறைவான அளவில் இருப்பதாகவும் கூறப்பட்டது.
குணமடைந்து வீடு திரும்பும் அத்தகையோரில் 40 வீதத்தினருக்கு நோய் எதிர்ப்புச் சக்தி வெகுவாகக் குறைந்திருப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.
அதனால் வைரஸ் பரவலைத் தடுக்க நோய் எதிர்ப்புச் சக்தியை மட்டுமே நம்பியிருக்காமல், பாதுகாப்பான இடைவெளி, சுகாதாரம், தனிமைப்படுத்துதல், பரவலான பரிசோதனைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்தல் ஆகியவை அவசியம் என்று ஆய்வாளர்கள் வலியுறுத்தினர். (ம)

---

# வேட்பாளரின் வீட்டின் காவலாளி மர்மச் சாவு

கொழும்பு, ஜூன் 25
எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிடும் வேட்பாளரின் வீட்டுக் காவலாளி மற்றும் நாய் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளமை குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.
தலங்கம பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் நேற்றுமுன்தினம் காலை இந்த வீட்டை சோதனைக்கு உட்படுத்தியபோது காவலாளி மற்றும் நாயின் உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கடந்த சில தினங்களுக்கு முன்னர் காவலாளி உயிரிழந்திருக்கக் கூடும் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.
72 வயதுடைய களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

---

# பொலிஸார் மூவர் பணிநீக்கம்

கொழும்பு, ஜூன் 25
அரநாயக்க பொலிஸ் நிலையத்தின் 3 உத்தியோகத்தர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். முச்சக்கரவண்டியில் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட 80 மதுபான போத்தல்களுக்குப் பதிலாக 25 மதுபான போத்தல்களுடன் மற்றுமொருவரை சந்தேகநபராக பொலிஸ் நிலையத்தில் முற்படுத்திய குற்றச்சாட் டில் இவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.
இதற்காக 60 ஆயிரம் ரூபா பணத்தை இந்த 3 பொலிஸ் உத்தியோகத்தர்களும் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும், இரண்டு சார்ஜன்களுமே இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கேகாலை பிராந்தியத்துக்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (க)

---

# மேலதிக கொடுப்பனவு சிக்கலில்!

கொழும்பு, ஜூன் 25
திறைசேரியில் நிலவும் நிதிப்பற்றாக்குறையால், மாகாண சபைகளுக்குட்பட்ட அரச ஊழியர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்களால் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சுக்கு அண்மையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நெருக்கடியில் சுகாதார ஊழியர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக நேரக் கொடுப்பனவின் மொத்தத் தொகையை அறிவிக்குமாறு அமைச்சு கோரியுள்ளது.
இதேவேளை அறிக்கைகள் கிடைத்தவுடன் திறைசேரியிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு தெரிவித்துள்ளது. (க)

---


# வெளிநாடுகளுடன் தொடர்புடைய பொருளாதாரத்தில் கடும் பாதிப்பு

## நாடு முடக்கப்பட்டதால் இந்த நிலை என்கிறது மத்திய வங்கி

கொழும்பு, ஜூன் 25
கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் முடக்கப்பட்டதன் காரணமாக கடந்த ஏப்ரல் மாதத்தில் வெளிநாடுகளுடன் தொடர்புபட்டதான நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்று மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.
கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த மார்ச் மாதத்திலிருந்து நாட்டின் செயற்பாடுகள் அனைத்தும் முழுவதுமாக முடக்கப்பட்டதோடு, இம்மாதத் தொடக்கத்திலிருந்தே அவை மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உள்நாட்டில் மாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் அனைத்து நாடுகளும் கட்டுப்பாடுகளை விதித்தமையால் பொருளாதாரத்தில் பெரும் தேக்கநிலையொன்று ஏற்பட்டிருக்கிறது.
இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் நாட்டின் வெளிநாட்டுத்துறை செயலாற்றம் எவ்வாறாக அமைந்திருந்தது என்பது குறித்து மத்திய வங்கி வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் கூறப்பட்டிருக்கிறது.
அதில் மேலும் உள்ளதாவது:
கடந்த ஏப்ரல் மாதத்தில் கொரோனா வைரஸ் தொற்றுடன் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் இலங்கையின் வெளிநாட்டுத்துறை மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டது.
நாடு பகுதியளவில் முடக்கப்பட்டதால் ஏப்ரல் மாதத்தில் நாட்டின் வணிகப்பொருள் ஏற்றுமதித்துறை குறிப்பிடத்தக்களவில் பாதிக்கப்பட்டதுடன், சுற்றுலாத்துறை முழுவதுமாகவே பாதிக்கப்பட்டது.
அதேவேளை இறக்குமதிகளைப் பொறுத்தவரை, அவற்றை நிரம்பல் செய்வதற்கான தொடர்புச்சங்கிலிகளில் ஏற்பட்ட இடையூறுகளாலும், அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி ஆகியவற்றால் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளினாலும் இறக்குமதிச்செலவுகளில் வீழ்ச்சியேற்பட்டதுஎன்றுள்ளது. (ஐ)

# இலவசக் கல்வியை சோதனைக்குள்ளாக்கிய கொரோனா





■ நிலாந்தன்

யாழ் நகரப்பகுதியில் ஒரு கணினி நிறுவனத்தை வைத்திருக்கும் சசீந்திரன் கமலநாதன் முகநூலில் பின்வருமாறு எழுதி இருக்கிறார்,

*" சிறிது நாட்களுக்கு முன்னர் எனது வியாபார நிறுவனத்தில் கணனி ஒன்றை கொள்வனவு செய்வதற்காக ஒரு குடும்பம் வந்தது. கணினி ஒன்றைத் தயார்செய்யும்படி அவர்களது தேவையை கூறிய பின்னர் வங்கியில் சென்று பணம் எடுத்து வருகின்றோம் என்று கூறினார்கள். கணனியை தயார் செய்து வைத்திருந்த பொழுது பின்னர் வந்து கலங்கிய முகத்துடன் பிறகு வருகின்றேன் என்று கூறினார்கள். இங்கே வாருங்கள் அம்மா உட்காருங்கள் என்ன பிரச்சினை என்று வினவினேன். சிறிது சிறிதாகப் பேசத்தொடங்கினார். நகைகளை அடகு வைத்த வங்கிப் பற்றுச்சீட்டுகளை என்னிடம் காட்டினார். இவ்வளவுதான் என்னால் திரட்ட முடிந்தது மிகுதி பணம் 12000 கிடைத்த பின்பு தான் நான் கணினியை வாங்கலாம் என்று கூறினார். பிள்ளையினுடைய தற்போதைய கல்வித் தேவைக்காகத்தான் அவர் கணினி வாங்குகிறார். நான் கூறினேன் நீங்கள் இப்பொழுது கணனியை கொண்டுசெல்லுங்கள். பிறகு பணம் கிடைத்த பிறகு கொண்டுவந்து தாருங்கள் என்று. இன்று காலை கொண்டு வந்து மிகுதிப் பணத்தை தந்தார். தந்து விட்டு எந்தவித பொறுப்பும் இல்லாமல் எப்படி இவ்வளவு பணம் கடன் தந்தீர் என்று கேட்டார். பணம் சம்பாதிப்பதிலும் பார்க்க ஆட்களை சம்பாதிப்பது மேல் என்று கருதுவதால் என்று கூறினேன்.."*

அதாவது இலத்திரனியல் கற்பித்தல், கற்றல் என்பது மாணவர்களுக்கிடையில் அசமத்துவங்களை பெரிதாக்கி இருக்கிறது. கல்வியை தனது முதலீடாக கருதும் ஒரு சமூகம் வைரஸ் தொற்றுக் காலத்தில் விடுபட்டிருக்கும் கல்வியை எப்படியாவது தொடர்ந்து விட வேண்டும் என்ற வெறியோடு இலத்திரனியல் கல்விக்கு தேவையான உபகரணங்களை பெரும் விலை கொடுத்து வாங்கி வருகிறது. சாதாரண தொடு திரை கைபேசிகளில் தொடங்கி மடிக்கணினிகள், மேசைக் கணினிகள், ஹெட்போன் என்று பலவிதமான இலத்திரனியல் உபகரணங்களையும் ஆசிரியர்களும், மாணவர்களும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

வைரஸ் தொற்றுக் காரணமாக கொழும்பிலிருந்து இலத்திரனியல் பொருட்களின் வரத்து தடுக்கப்பட்ட ஒரு பின்னணியில் கைபேசி களுக்கும் கணினிகளுக்குமான கேள்வி அதிகரித்திருப்பதால் அவற்றின் விலையும் சில ஆயிரங்களால் அதிகரித்து வருகிறது. ஏழைப் பெற்றோரும் ஆசிரியர்களும் விலை கூடியிருக்கும் இலத்திரனியல்கருவிகளைவாங்கசிரமப்படுகிறார்கள்.

வீட்டுக்கு வந்த பள்ளிக்கூடம் எனப்படுவது ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டது. கைபேசியில் பாடத்தைப் படிக்கும் ஒரு பிள்ளை "சூம் "வகுப்பாக இருந்தாலும் மைக்ரோ சொஃப்ட் டீம்ஸ் வகுப்பாக இருந்தாலும் அது சிறிய கைபேசித் திரையில் தான் பார்க்கும். அச்சிறிய திரையானது விரைவில் அதன் கண்களை களைக்கச் செய்துவிடும். கைபேசியில் வகுப்பை பார்த்தபடியே உறங்கிய பிள்ளைகள் அதிகம் என்று அவதானிக்கப் பட்டுள்ளது. பிள்ளைகள், வகுப்பை தொடர்ந்தும் பின்பற்றுகிறார்களா அல்லது வேறு எதையாவது செய்கிறார்களா என்பதனை ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டிய ஒரு நிலைமை.

முகம் பார்த்து நடக்கும் வகுப்புகளில் உயிர்த் தொடர்பு இருக்கும். ஆனால் முகம் பார்க்காத வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கும் பொழுது பிள்ளை வகுப்பில் இருக்கிறதா இல்லையா என்பதனை உறுதிப்படுத்துவது கடினம். அவ்வாறு உறுதிப்படுத்துவதற்காக எல்லாருடைய முகங்களையும் பார்த்துக் கதைக்கும் ஒரு ஏற்பாட்டுக்கு போனால் அது டேட்டாவை தின்று விடும். சில வகுப்புக்கள் முடியும் போது சிலவேளைகளில் ஒரு ஜிபி டேட்டா முடிந்து விடுகிறது என்று ஒரு பெற்றோர் சொன்னார்.

ஒவ்வொரு நாளும் 99 ரூபா பெறுமதியான டேட்டா தேவைப்படுகிறது என்று மற்றொரு பெற்றோர் சொன்னார். இவ்வளவு நேரமும் நாம் பார்த்தது கைபேசிகளை உபயோகிக்கும் பிள்ளைகளைப் பற்றி. கைபேசித் திரை கற்றல் கற்பித்தலுக்கான ஒரு திரை அல்ல. அது மிகமிகக் குறுந் திரை. அதிலும் கூட ஏற்றத்தாழ்வுகள் உண்டு. சில பிள்ளைகள் விலை கூடிய கைபேசியை பயன்படுத்தும். சில பிள்ளைகள் விலை குறைந்த கைபேசிகளைப் பயன்படுத்தும். கைபேசி தவிர கணினி 'ரப் 'போன்றவற்றை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு பிள்ளையும் அதனதன் வசதிக்கும் வளத்துக்கும் ஏற்ப அவற்றை வாங்கும். பயன்படுத்தும். டேட்டா விவகாரத்திலும் அப்படித்தான். சில பிள்ளைகள் அன்றாடம் சிறிய டேட்டா பாக்கேஜ்ஜை உபயோகிக்கும்.

வசதி உள்ள பிள்ளைகள் பெரிய பக்கேஜ் டேட்டாவை அல்லது ரவுட்டரை உபயோகிக்கும். எந்தப் பக்கேஜ்ஜை பயன்படுத்துவது எந்த இலத்திரனியல் உபகரணங்களை பயன்படுத்துவது என்பதனை அந்த பிள்ளையின் அல்லது அந்த ஆசிரியரின் வசதி வாய்ப்புகளே தீர்மானிக்கின்றன. இதுவிடயத்தில்பள்ளிக்கூடங்களோ அல்லது கல்வித்திணைக்களமோ அல்லது ஏனைய அரச நிறுவனங்களோ மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உதவுவதாகத் தெரியவில்லை. குறிப்பாக கல்வித்திணைக்களம் மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஒருங்கிணைப்பதாகத் தெரியவில்லை.



மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் டேட்டா விடயத்தில் சலுகைகள் வழங்கப்படும் என்று சில தொலைத் தொடர்பு நிறுவனங்கள் அறிவித்து இருக்கின்றன. ஆனால் பெரும்பாலானவர்கள் அந்த உதவியைப் பெறுவதில்லை என்று கூறப்படு கிறது. இது தொடர்பில் பாடசாலைக்கு பாடசாலை நிலைமை வேறுபடுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள சில முன்னணிப் பாடசாலைகள் லொக்டவுன் காலத்திலேயே வைபர் குழுக்களை உருவாக்கி பின்னர் அக் குழுக்களை மைக்ரோ சொப்ட் டீமுக்கூடாக இலத்திரனியல் வகுப்புக்களாக மாற்றி விட்டன. உதாரணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. ஆனால் வசதி குறைந்த பாடசாலைகள் இப்பொழுதும் பாடங்களை கைபேசியில் படமெடுத்து அனுப்பும் ஒரு நிலைமை தான் காணப்படுகிறது. இந்த ஏற்றத்தாழ்வு இலவசக் கல்வி ஏற்பாட்டுக்கு எதிரானது. இலவச கல்வி என்பது மாணவர்கள் எல்லோரையும் சமமாகப் பார்ப்பது , சமமாக நடத்துவது. பாடசாலை சீருடை என்பது ஏற்றத் தாழ்வுகளை இல்லாமல் செய்வதற்கான ஏற்பாடு. இலவசச் சீருடை ,இலவசப் பாடப் புத்தகம் என்றெல்லாம் தொடங்கி விட்டு இப்பொழுது இலத்திரனியல் கல்வியானது அந்த சமத்துவத்தைக் கேள்விக் குள்ளாக்கி விட்டதா ? கொவிட் 19 இலவசக் கல்வியை சோதனைக்குள்ளாக்கி விட்டதா?

**"கைபேசியில் பாடத்தைப் படிக்கும் ஒரு பிள்ளை "சூம் "வகுப்பாக இருந்தாலும் மைக்ரோ சொஃப்ட் டீம்ஸ் வகுப்பாக இருந்தாலும் அது சிறிய கைபேசித் திரையில் தான் பார்க்கும். அச்சிறிய திரையானது விரைவில் அதன் கண்களை களைக்கச் செய்துவிடும். கைபேசியில் வகுப்பை பார்த்தபடியே உறங்கிய பிள்ளைகள் அதிகம் என்று அவதானிக்கப்பட்டுள்ளது. பிள்ளைகள், வகுப்பை தொடர்ந்தும் பின்பற்றுகிறார்களா அல்லது வேறு எதையாவது செய்கிறார்களா என்பதனை ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டிய ஒரு நிலைமை.**

இரா.புத்திரசிகாமணி



இன்று ஜூன் 25 ஆம் திகதி மாமனிதர் நடராஜா ரவிராஜின் பிறந்ததினமாகும். அதனையொட்டி இந்த நினைவுக் குறிப்பு பிரசுரமாகின்றது.

# வரலாற்றில் வாழும் ரவிராஜ்

பேரினவாதம் பேசி நாட்டையே குழப்பிய இனவாதிகளுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தவர் அமரர் நடராஜா ரவிராஜ். நாடாளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் அவர்கள் பேசும் சிங்கள மொழியிலேயே அவர்களை மிரட்டி வைத்தவர். நம்மோடு இருக்க வேண்டிய நேரத்தில் அவர் இல்லாமல் போனது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அவர் நம்மத்தியில் இருந்திருந்தால் இன்று (ஜூன் 25) தனது 58ஆவது அகவையை கொண்டாடி இருப்பார்.

யாழ்.தென்மராட்சி சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட ரவிராஜ் 1987ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக அடிபதித்தார்.

ஆரம்பம் முதலே அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் என்பனவற்றால் பாதிக்கப்பட்ட நம்மவர்களுக்காக வாதாடியவர் இவரை மனித உரிமைகள் சட்டத்தரணி என்றே அடைமொழிக்குள் அழைப்பார்.

1997 ஆம் ஆண்டு தீவிர அரசியலில் நுழைந்த ரவிராஜ் யாழ்.மாநகர சபையின் பிரதி மேயராகவும் தொடர்ந்து 1998 யாழ்.மாநகர மேயராகவும் தெரிவானார். அதன்பின்னர் 2001, 2004 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளம் உறுப்பினராக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

மாமனிதர் ரவிராஜ் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த காலம் வெறும் 5 ஆண்டுகள்தான். எனினும், அக்குறுகிய காலப்பகுதியில் அளப்பரிய பணிகளை அவர் ஆற்றியிருந்தார். இதனை எல்லோரும் அறிவர். எத்தகைய வேலைப்பளு இருந்தாலும் மாதாந்தம் சாவகச்சேரியிலுள்ள அவரது இல்லமான ராஜ் அகத்தில் திரளும் மக்களைச் சந்திப்பதற்கு அவர் ஒருபோதும் தவறியதில்லை.

மக்களின் குறைகளைக் கேட்டறிந்து நிவர்த்தி செய்வதுடன், பிரதேசத்திலுள்ள கல்விமான்களதும், முதியோர்களதும் ஆலோசனைகளைச் செவிமடுத்து அதன்வழியே, தனது பணிகளைச் செய்துவந்தார். இன்னொரு ஹிரோஷிமா என ரணில் விக்கிரமசிங்கவினால் வர்ணிக்கப்பட்ட அழிந்து போன சாவகச்சேரி நகரத்தை மீளக் கட்டியெழுப்புவதிலும், தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்களை மீள்குடியேற்றுவதிலும் முன்னின்று உழைத்தார். துன்பப்படுவோருக்குத் தானாகவே முன்வந்து உதவும் பண்பைக் கொண்டிருந்தார். இதனால் தான் அவர் குறுகிய காலத்திலேயே எல்லோராலும் விரும்பப்படும் ஒரு தலைவரானார். இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தையும், அதற்கான நியாயங்களையும் மக்கள் அனுபவித்துவந்த சொல்லொணாத் துன்பங்களையும் சிங்கள மக்களுக்கும், சர்வதேசத்துக்கும் உரிய முறையில் கொண்டுசென்றார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் அவற்றினை மிக லாவகமாகக் கையாண்டு தனது கருத்துக்களைக் கேட்போர் மனதில் உறைக்கவும், உணரவும் வைத்தார். தமிழர் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களைச் செம்மையான முறையில் பயன்படுத்தினார். குறிப்பாகச் சிங்கள ஊடகங்களை மிகச் செம்மையான முறையில் பயன்படுத்தி தமிழர் போராட்டத்தின் நியாயங்களையும், தமிழர் தாயகத்தின் உண்மை நிலைமைகளையும் உடனுக்குடன் சிங்கள மக்களிடம் எடுத்துக்கூறினார்.

இவரது இந்தப் பணிதான் அவரது உயிரைப் பறிப்பதற்குரிய முதன்மைக் காரணியாக இருந்தது எனப்பரவலாகக் கருதப்படுகின்றது. தெற்கிலுள்ள சிங்களக் கடுங்கோட்பாட்டாளர்கள் அவரை விடுதலைப் புலியாகவே கருதினர். தமிழர் உரிமைக்காகப் போராடுபவர்கள் சிங்கள மக்களின் விரோதிகள் என்ற சிங்களக் கோட்பாட்டாளரின் கூற்றைப் பொய்யென்று சிங்கள ஊடகங்களினூடாக எடுத்துக்கூறி, இனங்களுக்கிடையிலான நல்லுறவை ரவிராஜ் வளர்த்து வந்தார். இறுக்கமான அரசியல் சூழ்நிலையிலும் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் பாதையில் தனக்கேயுரித்தான ஆளுமையுடன் ஒரு ஜனநாயகப் போராளியாகத்தடம் பதித்து, போராடும் வல்லமையை அவர் கொண்டிருந்தார். மனித உரிமைகள் மீது அதீத நம்பிக்கை கொண்டிருந்த ரவிராஜ் மனித உரிமை அமைப்புகளில் இணைந்து இலங்கையிலுள்ள சகல மக்களதும் உரிமைக்காகக் குரல் கொடுத்து வந்தார்.

இந்தநிலையில், நவம்பர் 10, 2006 வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் ரவிராஜ் மீது கொழும்பு நாரகேன்பிட்டிய மனிங்ரவுனில் உள்ள அவரது வீட்டுக்கருகில் இனந்தெரியாதோரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ரவிராஜ் சிகிச்சை பலனின்றி காலை 9.20 மணிக்கு உயிரிழந்தார்.

தமிழீழத்தின் அதியுயர் தேசிய விருதான மாமனிதர் விருதை ரவிராஜுக்கு வழங்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கௌரவித்துள்ளார்.

இப்போது ரவிராஜ் உயிரோடிருந்திருந்தால் எமக்கு நல்லதொரு அரசியல் தலைமையை வழங்கியிருப்பார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

சத்திய இலட்சியத்துக்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு என்றும் அழித்து விடுவதில்லை. சரித்திரநாயகர்களாக எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்கள் என்றும் வாழ்வார்கள். அதேபோன்று தமிழர் வாழ்விலும் வரலாற்றிலும் ரவிராஜ் என்றும் நிலைத்திருப்பார்.



- ஆரம்பம் முதலே அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் என்பனவற்றால் பாதிக்கப்பட்ட நம்மவர்களுக்காக வாதாடியவர் இவரை மனித உரிமைகள் சட்டத்தரணி என்றே அடைமொழிக்குள் அழைப்பார்.
- தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் அவற்றினை மிக லாவகமாகக் கையாண்டு தனது கருத்துக்களைக் கேட்போர் மனதில் உறைக்கவும், உணரவும் வைத்தார்.
- தமிழர் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களைச் செம்மையான முறையில் பயன்படுத்தினார்.




# விமான நிலையத்தை திறக்க தீர்மானமில்லை

கொழும்பு, ஜுன் 25

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் வழமையான விமான பயணங்களுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை திறக்கவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

எனினும் இது தொடர்பில் இறுதித் தீர்மானம் இதுவரை எடுக்கவில்லை என்று விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

விமான பயண செயற்பாடுகளை மீண்டும் முன்னெடுக்க சுகாதார அதிகாரிகள் இதுவரை அனுமதி வழங்கவில்லை என்று நிறுவனத்தின் உப தலைவர் ரஜீவ் சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடல் இடம்பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார். துறைசார் அமைச்சர் வெளியிட்ட அறிவிப்புக்கு அமைய விமான நிலையத்தைத் திறக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் கொரோனா என்ற கொடிய நோய்க்கு மத்தியில் விமான நிலையத்தைத் திறப்பதற்கு சுகாதார அதிகாரிகளின் அறிவிப்பே மிக முக்கியமாகும். அவர்களின் ஆலோசனைக்கு அமையவே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் விமான நிலையச் செயற்பாட்டு நடவடிக்கையை ஆரம்பிக்கும் போது, ஏற்படும் பல சிக்கல்களுக்குத் தீர்வு தேட நேரிடும்.

கொரோனா நோயாளிகளை அடையாளம் காணுவதற்காக பி.சி.ஆர் பரிசோதனைக்காக செலவிடப்படும்பணத்தை விமான பயணிகளிடம் அறிவிடும் முறை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனைக்காக ஒருவரிடம் 6 ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் 8ஆயிரம் ரூபா வரையான பணம் அறவிட நேரிடும்.

விமான நிலையத்தைத் திறந்த பின்னர் அந்தப் பணத்தை அரசால் ஏற்க முடியாத நிலைமை ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## சினமன் ஹோட்டலின் தாக்குதல்தாரி

# ஸாம்பியா செல்வதாகச் சொல்லிவிட்டே தற்கொலைத் தாக்குதல் மேற்கொண்டார்!

## பிரதான விசாரணை அதிகாரி சாட்சியம்

கொழும்பு, ஜூன் 25

உயிர்த்தஞாயிறு தினத்தன்று கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் தற்கொலைத் தாக்குதல் நடத்திய மொஹமட் இப்ராஹீம் இன்சாப் அஹமட் எனும் தற்கொலைதாரி, தாக்குதலுக்கு இரு நாள்களுக்கு முன்னர் வியாபார நடவடிக்கைகளுக்காக ஸாம்பியா செல்வதாக மனைவியிடம் பொய் கூறி விட்டு, தற்கொலைத் தாக்குதல்களுக்கு தயாராகி, தாக்குதல்களை நடத்தியுள்ளார் என்று விசாரணைகளில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்று குறித்த குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யும் பிரதான விசாரணை அதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரவீந்ர விமலசிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'உண்மையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை அடுத்து சி.ஐ.டி.யின் பல்வேறு குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்தன. அதன்படி நான் சினமன் கிராண்ட் ஹோட்டலில், தப்ரபேன் உணவகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பில் விசாரித்தேன். நான் அங்கு சென்று ஆராய்ந்த போது தற்கொலைதாரியின் தலை, உடல் பாகங்கள் சிலவற்றை அடையாளம் கண்டேன். எனினும் தற்கொலைதாரி யார் என அந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அறிந்திருக்கவில்லை.

இந் நிலையில் தான் எமது இன்னொரு குழு, ஷங்ரில்லா ஹோட்டலில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்தது. அங்கு ஹோட்டலில் உள் நுழையும் போது, அந்த ஹோட்டலில் தாக்குதல் நடத்திய ஒரு தற்கொலைதாரியான மொஹம்மட் இப்ராஹீம் இல்ஹாம் அஹமட் என்பவர் முகவரியொன்றினை கொடுத்திருந்தார். தெமட்டகொட பகுதியை அந்த முகவரி அடையாளம் காட்டியது. அதன்படி அந்த தற்கொலைதாரியின் வீட்டைத் தேடிச் சென்று நடத்திய விசாரணையின்போதே, சினமன் கிராண்ட் ஹோட்டலில் தற்கொலைத் தாக்குதல் நடத்தியவர் ஷங்ரில்லா குண்டுதாரிகளில் ஒருவரான மொஹம்மட் இப்ராஹீம் இல்ஹாம் அஹமட்டின் சகோதரரான மொஹம்மட் இப்ராஹீம் இன்சாப் அஹமட் என தெரியவந்தது.



அவர் தான் வியாபாரத்துக்காக ஷாம்பியாவுக்குச் செல்கின்றேன் என்று சொல்லிவிட்டே தாக்குதல் நடத்தியுள்ளார். ஸாம்பியா செல்வதாகக் கூறி விமான நிலையத்தில் இறங்கிய இன்சாப் அஹமட் அங்கு செல்லாத போதும் குண்டுத் தாக்குதல் வரையிலும் வெளிநாட்டில் இருப்பதைப் போன்றே, நடந்துகொண்டுள்ளார்.

அத்துடன் குண்டுதாரி, அவரது மனைவிக்கு நேரம் கிடைக்கும் போது பார்க்குமாறு கூறிய பென்ட்ரைவ்களில் இருந்து 4 குரல் பதிவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆங்கில, தமிழ் மொழிகளில் அவை உள்ளன. அவை, குடும்ப உறுப்பினர்களுக்கு, மனைவிக்கு, தனது ஊழியர்களுக்கு, பொது மக்களுக்கு என தனித்தனியாக பேசப்பட்ட குரல் பதிவுகளாகும்.

பல்வேறு வர்த்தகங்களுக்கு சொந்தக்காரரான இன்சாப் அஹமட்டுக்கு, செப்பு தொழிற்சாலையை வெற்றிகரமாகக் கொண்டுசெல்ல தொழில் அபிவிருத்தி சபை ஊடாக, உரிய வழிகாட்டல் நியதிகளையும் மீறி உலோக கழிவுகள் வழங்கப்பட்டுள்ளமை எமது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. 2017ஆம் ஆண்டில் தொழில் சபையில் தன்னை பதிவு செய்துள்ள இன்சாப் அஹமட், ஒரு கட்டத்தில் செப்பு தொழில் தொடர்பில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை ஒன்றின்போது அப்போது, விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் ரிஷாத் பதியுதீனையும் சந்தித்துள்ளார் - என்றார். (ம)

# கட்சி ஒன்றுக்குச் சார்பாக கத்தோலிக்க சபை நடக்காது

## தேசிய கத்தோலிக்க நிலையம் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 25

பேராயரோ அல்லது இலங்கையிலுள்ள கத்தோலிக்கசபையோ எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆட்சியிலிருந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்காக அல்லது புதிய அரசாங்கத்தை உருவாக்குவதற்காகச் செயற்படவில்லை. எதிர்காலத்திலும் அவ்வாறு செயற்படப்போவதில்லை. கத்தோலிக்க சபை இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவளிக்குமே தவிர குறித்தவொரு கட்சிக்கு சார்பாகச் செயற்படாது என்று சமூக தொடர்பாடலுக்கான தேசிய கத்தோலிக்க நிலைய்ம் தெரிவித்துள்ளது.

மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ வெளியிட்டுள்ள கருத்துக்கு கண்டனம் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்படடது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு சமூக தொடர்பாடலுக்கான தேசிய கத்தோலிக்க நிலையம் கண்டனம் தெரிவிக்கின்றது. கத்தோலிக்கர்களும் இலங்கை பிரஜைகளே. ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் இவர்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. இலங்கை கத்தோலிக்க சபை தேசத்துக்கும் தேசத்தின் கொள்கைக்கும் ஆதரவளித்து செயற்படுமே தவிர குறிப்பிட்ட அரசாங்கத்துக்கோ கட்சிக்கோ ஆதரவளிக்காது குறித்தவொரு கட்சிக்கு ஆதரவளிப்பதாகத் தவறாகக் கருதக் கூடாது-என்றுள்ளது. (ஐ)

## சட்டவிரோத குடியேற்றம்;

# ரிஷாத்துக்கு எதிரான வழக்கு ஜூலை 31 வருகிறது தீர்ப்பு

கொழும்பு, ஜுன் 25

வில்பத்து தேசிய சரணாலயப் பகுதியில் சட்டவிரோத குடியேற்றம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட தரப்பினருக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் ஜுலை 31ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

வில்பத்து பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்கு அருகில் அமைந்துள்ள மறிச்சுக்கட்டு வனப்பகுதிக்குச் சொந்தமான பிரதேசத்தில் காடழிப்பு மேற்கொண்டு அனுமதியற்ற கட்டுமானங்களை மேற்கொண்டமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனு தொடர்பான தீர்ப்பே குறித்த தினத்தில் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுச்சூழல் நீதி மையத்தினால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த நிலையிலேயே ஜனக் டி சில்வா மற்றும் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன ஆகிய நீதிபதிகள் அடங்கிய மேன்முறையீட்டு நீதிபதிகள் குழாமினால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

## மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த

# 2,500 வாக்காளர் பதிவு புத்தளத்துக்கு மாற்றம்!

மன்னார், ஜுன் 25

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த புத்தளம் மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட 2 ஆயிரத்து 500 வாக்காளர்களின் பதிவுகள் புத்தளத்துக்கு மாற்றப்பட்டுள்ளன என்று ம்மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜே. ஜெனிற்றன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது இம்முறை தேர்தலில் சுமார் 2 ஆயிரத்து 500 வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இதற்கான காரணம் புத்தளம் மாவட்டத்தில் நிரந்தர வதிவிடங்களை கொண்டவர்களின் பெயர்கள் புத்தளம் மாவட்டத்துக்கு மாற்றப்பட்டமையே. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை மன்னார் மாவட்டத்தில் நீதியானதும், நேர்மையானதும், சுகாதார வழிமுறைகளை பின்பற்றியதுமாக நடத்த கடும் முனைப்புக்களை எடுப்போம். தற்போது மன்னார் மாவட்டத்திற்கான தேர்தல் முறைப்பாட்டு நிலையத்தை ஆரம்பித்து கடந்த புதன் கிழமை முதல் செயற்படுத்தி வருகின்றோம் - என்றார். (ம-56)

# கருணாவிடம் போர்க்குற்ற விசாரணைகள் அவசியம்

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 25**

**கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தொடர்பில் போர்க்குற்ற விசாரணை அவசியம் என்று சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

மிக நீண்ட காலத்துக்கு முன்னரே அவரை போர்க்குற்ற விசாரணைகளுக்கு உட்படுத்தியிருக்கவேண்டும் என்று கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது படையினரை பெருமளவில் கொலை செய்தேன் என அவர் தெரிவித்துள்ளமையைத் தொடர்ந்து, இலங்கை அதிகாரிகள் இது குறித்து விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கருணா அம்மானின் தலைமையின் கீழ் செயற்பட்ட படையணியினர் 1990 ஆம் ஆண்டு ஜூனில் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்த நூற்றுக்கணக்கான பொலிஸாரைக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டுக் காணப்படுகின்றது.

மேலும் அந்த வருடம் ஓகஸ்ட் மாதம் அவரது படையணியினர் 200 பொதுமக்களைக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டுகளும் காணப்படுகின்றன.

எனவே கருணா மீது போர்க்குற்றங்கள் மற்றும் ஏனைய மனித உரிமை துஸ்பிரயோகங்களுக்காக விசாரணை செய்யவேண்டும் என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். (க)



## பேருந்துக் கட்டணத்தில் திருத்தம் சாத்தியமில்லை!

### போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 25

தற்போதைய சூழ்நிலையில் பஸ் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ள முடியாது. அதற்குப் பதிலாக சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் கவனத்திற்கொள்ள முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக அரசு அறிவித்த நடைமுறைகளைப் பின்பற்றுவதாலும், மக்கள் பொதுப் போக்குவரத்துக்களை விரும்பாதமையாலும் தமது வருமானம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசு போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்த வேண்டும் என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதையடுத்து அமைச்சருக்கும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் காரணமாக நாட்டின் அனைத்துத் துறைகளும் வருமானத்தை இழந்துள்ள நிலையில் பஸ் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வது உகந்ததல்ல. அது தொடர்பில் தாமோ அல்லது அரசோ உடன்படப்போவதில்லை. தனியார் பஸ் தொழில் துறையைப் பாதுகாப்பதற்கு அரசு பல்வேறு சலுகைகளை வழங்கியுள்ளது. லீசிங் மற்றும் காப்புறுதி அறவீட்டுக்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டதுடன் இலகு வட்டியில் கடன்களை பெற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது - என்று தெரிவித்துள்ளார். (ம)



## சிறுத்தைகள் மீட்பு!

கொழும்பு, ஜூன் 25

புஸல்லாவை, எல்பொட தோட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை இரு சிறுத்தைகள் வனஜீவராசி திணைக்களத்தால் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட சிறுத்தைகளில் ஒன்று உயிரிழந்துள்ள நிலையில் காணப்பட்டதுடன் மற்றையது மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியாவுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. 6 அடி நீளமான இளம் வயதுடைய சிறுத்தையே, வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்டிருந்த பொறியில் சிக்கி உயிரிழந்துள்ளது. இலங்கைக்கே உரித்தான அரிய வகையான சிறுத்தைகள் மலையகத்தில் வாழ்கின்றன என்பது அண்மையில் கண்டறியப்பட்டது. எனினும் குறுகிய காலப்பகுதிக்குள் ஐந்துக்கும் மேற்பட்ட சிறுத்தைகள் உயிரிழந்துள்ளன. (எ-ரி)

### 2,000 – 3,000 சிப்பாய்கள் கொலை:

## கருணாவின் கருத்து அப்பட்டமான பொய்!

### பொன்சேகா மறுப்பு

கொழும்பு, ஜூன் 25

ஆனையிறவில் வைத்து ஒரே நாளில் சுமார் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் வரையிலான படையினரைக் கொன்றோம் என்று கருணா தெரிவித்த கருத்தில் எவ்வித உண்மையும் இல்லை என்று தெரிவித்துள்ளார் பொன்சேகா.

இது தொடர்பில் பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தில் உள்ள அனைவரையும் கொலைசெய்தேன் என்ற தோற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர் பெரும் வீரராக முயல்கின்றார். ஆனால் அவர் சரணடைந்த சிப்பாய்களையே கொலைசெய்தார். பொதுமக்கள் முன்னணி கருணாவுக்கு பதவி வழங்கியுள்ளது. அரசு அவரைப் பாதுகாக்கின்றது. கருணா சிறையில் அடைக்கப்பட வேண்டியவர்- என்றார். (ம)

## இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு வரையறை

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 25

எதிர்வரும் சில மாதங்களுக்கு இணைப்பாடவிதான செயற்பாடுகளை வரையறை செய்யுமாறு கல்வி அமைச்சால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. விடுபட்டுள்ள கற்கைநெறிகளை முழுமையாக பூர்த்திசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்காக இந்தக் காலப்பகுதியை பயன்படுத்துமாறு கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எச்.எம். சித்ராநந்த தெரிவித்தார். காலைநேர ஒன்றுகூடல், நாளாந்த நிகழ்வுகள் உள்ளிட்ட இணை பாடவிதான செயற்பாடுகளை வரையறை செய்யுமாறும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அதிவேக வீதிகள் அமைப்பில் கடந்த ஆட்சியில் குளறுபடிகள்

### மஹிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 25

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மத்திய அதிவேக வீதியின் அமைப்புப் பணிகளின்போது அரசியல் தலையீடு இருந்ததாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மத்திய அதிவேக வீதியின் அமைப்புப் பணிகளின்போது அரசியல் தலையீடு இருந்துள்ளது.

அன்று பிரதமரின் செயற்பாடுகளை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை. அதன்மூலம் இந்த நாட்டு மக்களுக்கே இழப்பு ஏற்பட்டது. நாம் ஆரம்பித்த விடயங்களை அவர்கள் முன்னெடுத்துச் சென்றனர். புதிதாக எதனையும் ஆரம்பிக்கும் இயலுமை அவர்களுக்கு இருக்கவில்லை. அதிவேக வீதியையும் நாம் திட்டமிட்டிருந்தோம். ஒப்பந்தம் வழங்கியிருந்தோம். ஒப்பந்தக்காரர்கள், இரண்டு மூன்று பேரை நீக்கி, ஒப்பந்தம் ஒரு



அமைச்சருக்கும் நிறுவனமொன்றுக்கும் வழங்கப்பட்டது. அந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட பகுதியில் எதுவும் இடம்பெறவில்லை.

நான் அண்மையில் அங்கு கண்காணிப்புப் பயணம் மேற்கொண்டேன். அமைச்சரின் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பகுதியே மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அரசியல் தேவைகளுக்காக அந்தப் பகுதியை வழங்கியமையினால், நாட்டு மக்களுக்கு இன்று இழப்பு ஏற்பட்டுள்ளது - என்றார். (ம)

## சிரேஷ்ட ஊடகவியலாளர் காலமானார்

கொழும்பு, ஜூன் 25

இலங்கையின் சிரேஷ்ட ஒலி, ஒ… பரப்பாளரும், சூரியன் வானொ… யின் முதலாவது நிகழ்ச்சி முகா… யாளரும் முன்னாள் ஆலோச… மான சி.நடராஜசிவம் நேற்றுக் கா… மானார்.

இவர் இலங்கை வானொலி, ரூப… கினி போன்ற ஊடகங்களிலும் ப… யாற்றியுள்ளார்.



# பௌத்த தேசியவாதத்தைப் பரப்புவது நல்லிணக்கத்தை ஏற்படுத்தமாட்டாது

## துரைராஜசிங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 25**

**ஜனாதிபதி இந்த நாட்டில் சிங்கள பௌத்த தேசியவாதத்தைப் பரப்ப முற்படுவது நல்லிணக்கத்தை ஏற்படுத்த மாட்டாது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமான கிருஷ்ணபிள்ளை துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அரசு தமது பலத்தைக் கூடுதலாகப் பிரயோகிக்கும் என்ற நிலைமை தற்போது உள்ளது. சர்வதேச கண்காணிப்புக் குழுக்களின் மேற்பார்வையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் ஜனநாயகத் தேர்தலாக இருக்கும். இந்த விடயத்தில் அரசு இன்னும் சரியான கரிசனை காட்டவில்லை.

அரசு இந்த நாட்டில் ஜனநாயகத்தைப் பேணவேண்டும். இராணுவ மயப்படுத்தப்படுகின்ற இந்த நிலமையை மறு பரிசீலனை செய்யவேண்டும். ஜனாதிபதி முற்று முழுதாக சிங்கள பௌத்த தேசியவாதத்தை இந்த நாட்டிலே பரப்புவது இந்த நாட்டிலே நல்லிணக்கத்தை ஏற்படுத்த மாட்டாது என்ற விடயத்தைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

இந்த நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் உரிமை வழங்கக் கூடிய விதத்தில் அரசியல் செயற்பாடுகளை ஜனாதிபதி மற்றும் அவருடைய கட்சியும் செயற்பட வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை போர் தொடர்பான விடயத்துக்கும் இன்னும் முடிவு கிடைக்கவில்லை. பொறுப்புக்கூறுதல் விடயத்தில் ஐக்கிய நாடுகளை சபையில் வைக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் அரசு சரியான பதிலை வழங்கவில்லை. அதிலிருந்து பின்வாங்குவதாகக் கூறியுள்ளார்கள். சர்வதேச மட்டத்தில் இவ்வாறான ஒரு விடயத்தில் ஒருவரும் பின்வாங்க முடியாது. அதனுடைய செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டே இருக்கும். பொறுப்புக்கூறலுக்கும் இணக்கம் தெரிவிக்காமல் விட்டால் அது மாற்று வகையில் நிச்சயமாகக் கையாளப்படும்.

இலங்கையை ஒரு நாடாக வைத்துக்கொண்டு மக்கள் எல்லோரும் சமமானவர்கள் என்ற அடிப்படையில் இந்த நாட்டை ஆட்சி செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். கடந்த அரசாங்க காலத்தில் உருவாக்கி முற்றுப்பெறாதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தை முழுமையாக்குகின்ற வகையில் அரசாங்கம் சிந்திக்க வேண்டும்- என்றார். (ப-22)

# ஈழத் தமிழர் ஒருவரை கனடாவில் காணவில்லை

கனடாவில் இலங்கைத் தமிழர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று ரொறன்ரோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக, ரொறன்ரோ பொலிஸாரின் அதிகாரபூர்வ ருவிட்டரில், நடராஜா மகேந்திரராஜா என்ற 52 வயதான நபரை கடந்த 21ஆம் திகதி முதல் காணவில்லை. 21ஆம் திகதி காலை 10 மணிக்கு அவர் கடைசியாக காணப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

# ஸஹ்ரான் இந்தியா தப்பிச்செல்ல ரிஷாத்தின் சகோதரர் உதவினார்

## *உளவுப் பிரிவொன்றின் முன்னாள் பணிப்பாளர் இப்படித் தெரிவிப்பு*

காத்தான்குடிப் பகுதியில், பயங்கரவாதி ஸஹ்ரானின் கும்பல் தொடர்புபட்ட மோதல் சம்பவம் ஒன்றினை அடுத்து, நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை அடுத்து, ஸஹ்ரான் ஹஷீம் இந்தியாவுக்கு தப்பிச் சென்றார் என்றும் அவ்வாறு படகில் இந்தியாவுக்கு செல்ல அவருக்கு முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரிப்கான் பதியுதீன் உதவியதாகவும் உளவுப் பிரிவொன்றின் முன்னாள் பணிப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

சாட்சியாளரின் அடையாளத்தை வெளிப்படுத்த வேண்டாம் என்ற ஆணைக் குழுவின் விஷேட கோரிக்கைக்கு அமைய குறித்த உளவுத் துறைப் பணிப்பாளரின் அடையாளம் வெளிப்படுத்தப்படவில்லை. எனினும் அவரின் சாட்சியம் என்ன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரின் சாட்சியத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் தேசிய தௌஹீத் ஜமாத் தரப்புக்கும் மற்றொரு தரப்பினருக்கும் இடையே காத்தான்குடியில் மோதலொன்று ஏற்பட்டது. அந்த மோதலைத் தொடர்ந்து ஸஹ்ரான் கத்தான்குடி பகுதியில் இருந்து தப்பிச் சென்றார். அந்த சம்பவத்தை மையப்படுத்தி ஸஹ்ரான் உள்ளிட்டோரைக் கைது செய்யநீதிமன்றம்பிடியாணை பிறப்பித்தது. அதனால், ஸஹ்ரான் அவ்வப்போது மாவனெல்லை மற்றும் குருநாகல் பகுதிகளில் பதுங்கி இருந்ததும் தெரியவந்தது.

பின்னர், 2018ஆம் ஆண்டு ஸஹ்ரான் மன்னார் ஊடாக இந்தியா சென்றிருந்தார். ஸஹ்ரான் இந்தியாவின் ஹைதராபாத்தில் இருந்து தனக்கு சொந்தமான யூடியூப் சேனல் மூலம் மற்றொரு வீடியோவை வெளியிட்டிருந்தார். ஸஹ்ரான் இந்தியாவில் காஷ்மீர்வரை சென்றதாக அப்போது தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன. ரிப்கான் பதியுதீனே ஸஹ்ரானுக்கு படகு மூலம் இந்தியா செல்ல உதவினார். அத்துடன் அக்காலப்பகுதியில் ரிப்கான் பதியுதீன் சட்டவிரோதப் பொருள்களை இந்தியாவில் இருந்து நாட்டுக்குள் கொண்டுவருகின்றார் என்றும் தகவல்கள் கிடைத்தன - என்றார். (ம்)

# கொரோனாத் தொற்று விழிப்புணர்வு நிகழ்வு

வவுனியா,ஜூன் 25



வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கொவிட்19 வைரஸ் தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா பழையபேருந்து நிலையத்தில் நேற்றுக் காலை தமிழ் ஊடகவியலாளர் சங்கத் தலைவர் சு.வரதகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட மாவட்டச் செயலர் சமன்பந்துலசேன, கொரோனோ வைரஸ் தொடர்பான விழிப்புணர்வு ஸ்டிக்கர்களை வாகனங்களில் காட்சிப்படுத்தி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து வர்த்தக நிலையங்கள், முச்சக்கரவண்டிகள்,பேருந்துகள் உள்ளிட்ட நகரின் முக்கிய பகுதிகளில் ஊடகவியலாளர்களால் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

தொடர்ந்தும் விழிப்புணர்வு செயற்பாடு வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

நிகழ்வுக்கான அனுசரணையை பிரித்தானியாவின் என்பீல்ட் நாகபூசணி அம்மன் ஆலயம் வழங்கியிருந்தது. (ஜ-110)

# ஆலய மஹோற்சவம் இம்முறை நடைபெறாது

யாழ்ப்பாணம்,ஜூன் 25

வண்ணார்பண்ணை வடமேற்கு ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் ஆலய மகோற்சவப் பெருவிழா இம்முறை நடைபெறாது என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

இன்று 25 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி வரையான 10 நாள்களும் தினமும் முற்பகல் 11 மணிக்கு விஷேட அபிசேகம் ஆரம்பமாகி நடைபெற்று விநாயகப் பெருமான் உள்வீதி உலா வரும் காட்சி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

# ஸஹ்ரான் தப்பிச் செல்ல ஒருபோதும் உதவவில்லை!

## ஆணைக்குழுவுக்கு ரிப்கான் பதியுதீன் கடிதம்

மன்னார், ஜூன் 25

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் பயங்கரவாதி ஸஹ்ரான், கடல் மார்க்கமாக தப்பிச் செல்வதற்கு 2018 இல் உதவியதாக தன்னைத் தொடர்புபடுத்தி ஜனாதிபதி ஆணைக்குழுவில் பொய்ச்சாட்சியம் வழங்கியுள்ளார் புலனாய்வுத் துறை முன்னாள் பணிப்பாளர் என்று முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவில், சாட்சியமளித்த புலனாய்வுத்துறை முன்னாள் பணிப்பாளர், ஸஹ்ரான் கடல் மார்க்கமாக தப்பிச் செல்வதற்கு, 2018 ஆம் ஆண்டு ரிப்கான் பதியுதீன் ஆகிய நான் மன்னார் துறையில் படகு வழங்கி உதவியதாகச் சாட்சியமளித்தார். இவர் வழங்கிய சாட்சியம் தொடர்பில், இன்று பல ஊடகங்கள் செய்திகளையும் வெளியிட்டுள்ளன. இது தொடர்பில் அதிர்ச்சியடைந்தேன். அரசியல் பழிவாங்கல் காரணமாக இச்சாட்சியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை முற்றாக நிராகரிக்கின்றேன். இது குறித்து, எனக்கும் விளக்கமளிக்க அவகாசம் வழங்கப்பட வேண்டும். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள எனது சகோதரர் ரியாஜ் பதியுதீனை திட்டமிட்டு பழிவாங்கவே, எனது பெயரையும் இவ்விடயத்தில் சம்பந்தப்படுத்தியுள்ளனர். எனவே, புலனாய்வுத் துறை முன்னாள் பணிப்பாளர் வழங்கிய சாட்சிகள் அனைத்தையும் முற்றாக நிராகரிக்கிறேன். இதுபற்றிய அதிருப்தியை ஜனாதிபதி ஆணைக்குழுவில் தெரிவிக்க எனக்கும் அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில், ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கும் ரிப்கான் பதியுதீன் எழுத்து மூலம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். (ப-56)

## கொரோனாத் தொற்று அதிஉச்சம் பெறும்!

*உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை*


நியூயோர்க், ஜூன் 25
கொரோனாப் பெருந்தொற்று ஒவ்வொரு நாளும் உச்சம்பெற்று வருகின்றது. இனிவரும் காலங்களில் அந்த வைரஸின் தாக்கம் மேலும் அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ளன - என்று தெரிவித்துள்ளது உலக சுகாதார நிறுவனம்.

இது தொடர்பில் அந்த அமைப்பால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஒவ்வொரு நாளும் கொரோனாத் தொற்று புதிய உச்சத்தை அடைகிறது. கடந்த 24 மணி நேரத்தில் உலகம் முழுவதும் சுமார் ஒரு லட்சத்து 83 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். நாங்கள் அனைத்து உலக நாடுகளையும் அடிப்படை உலக சுகாதார நடவடிக்கைகளை இரட்டிப்பாக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். கொரோனா பரிசோதனைகளை துரிதப்படுத்துங்கள். சுகாதார பணியாளர்களைப் பாதுகாப்பாக வைத்திருங்கள். பொதுமக்கள் பொது இடங்களில் சமூக இடைவெளியை பின்பற்றுங்கள். கைகளை தொடர்ந்து சுத்தமாக வைத்திருங்கள், மாஸ்க் அணியுங்கள்' என்று கூறப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 93 லட்சமாக அதிகரித்துள்ளது. 4 லட்சத்து 82 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 50 லட்சம் பேர் குணமடைந்துள்ளனர். (ம)





## கீழடியில் தோண்டத் தோண்ட ஆச்சரியம்

# 3,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்பொருள்கள் அடையாளம்

சென்னை, ஜூன் 25

**தமிழகம் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடிப் பகுதியில் ஆறாம் கட்டமாக அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கு சுமார் 3 ஆயிரம் ஆண்டுகள் பழமையான உலைகள், தண்ணீர் குடுவைகள், ஆபரணங்கள் என்பன நேற்று மீட்கப்பட்டன.**

6ஆம் கட்ட அகழ்வு கீழடி, கொந்தகை, அகரம் மற்றும் மணலூர் ஆகிய இடங்களில் நடைபெற்று வருகிறது. கொந்தகை அகழ்வாய்வில் ஆறு குழிகள் தோண்டப்பட்டு 13 முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டன. இதில் மூன்று முதுமக்கள் தாழிகளில் உள்ள எலும்புகள், மண்டை ஓடுகள், பானைகள் மரபணு ஆய்விற்காக அனுப்பப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அழகிய வடிவமைப்புடன் கூடிய தண்ணீர் குடுவை ஒன்றும் கொந்தகையில் கிடைத்துள்ளது. குடுவையின் மேற்புறத்தில் மூலிகை வண்ணங்களைக் கொண்டு கோடுகள் வரையப்பட்டுள்ளன.

அதேபோல அகரத்தில் நடைபெறும் அகழ்வாய்வில் தங்க நாணயம், நத்தை ஓடுகள், பானைகள் கிடைத்துள்ளன. பெரும்பாலான பானைகள் அடிப்புறத்தில் புகைப் படிந்திருப்பதால், அவைகள் உணவு சமைக்க பயன்படுத்தப்பட்டு இருக்கலாம்- என்றும் கூறப்படுகிறது. (ம)

## குறைந்த எண்ணிக்கையுடன் ஹஜ் பயணத்துக்கு ஏற்பாடு

*சவூதி அதிரடி*

ரியாத், ஜூன் 25
கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக ஹஜ் பயணம் நடைபெறுமா என்பது தொடர்பில் பெரும் சந்தேகம் நிலவிய நிலையில், குறைந்தளவு கூட்டத்துடன் அதை நடத்துவதற்கு சவூதி அரேபிய அரசு முன்வந்துள்ளது.

இது தொடர்பில் சவூதி அரேபிய அரசின் சார்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இந்த ஆண்டு ஹஜ் பயணம் நடைபெறும். ஆனால் வெளிநாட்டவர்கள் ஹஜ் பயணத்தை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சவூதி அரேபியர்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஹஜ் நடைபெறும் - என்றுள்ளது. (ம)



அமெரிக்காவில் ஜோர்ஜ் புளொய்ட் என்ற கறுப்பினத்தவர் படுகொலை செய்யப்பட்டமையை அடுத்து தோற்றம்பெற்ற நிறவெறிக்கு எதிரான போராட்டங்கள் தற்போதும் அங்கு தொடர்ந்து கொண்டிருக்கின்றன. சுமார் ஒரு மாதகாலமாக இந்தப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. (ம)





## மெக்சிக்கோவில் நிலநடுக்கம் சுனாமி எச்சரிக்கையால் பீதி

மெக்சிக்கன்சிற்றி, ஜூன் 25
மெக்சிகோவில் நேற்றுமுன்தினம் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 7.4 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது.

மெக்சிகோவின் ஆக்சாக்கா பகுதியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது என்று அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்து அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் தொற்றியது. அடுத்த சில மணிநேரங்களில் சுனாமி எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது. (ம)



# யாழ்ப்பாணப் பாடசாலைகளில் விசிறப்படுகிறது கிருமி நீக்கி

யாழ்ப்பாணம், ஜூன் 25

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும் நிலையில் பாடசாலைககளின் வளாகங்களில் கிருமித் தொற்று விசிறும் பணிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் எஸ்.சுதர்சனின் ஒருங்கிணைப்பில் சிறப்பு அதிரடிப் படையினரால் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் கல்லூரியில் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக 3 மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 5 கட்டங்களாக மீள ஆரம்பிக்கப்படவுள்ளன. எதிர்வரும் 29ஆம் திகதி அனைத்துப் பாடசாலைகளுக்கும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் கடமைக்குத் திரும்பவேண்டும்.

எதிர்வரும் ஜூலை 6 ஆம் திகதி திங்கட்கிழமை 5,11 மற்றும் 13ஆம் தரங்களில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும். எதிர்வரும் ஜூலை 20ஆம் திகதி திங்கட்கிழமை 10 மற்றும் 12ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும். அத்தோடு எதிர்வரும் ஜூலை 27ஆம் திகதி திங்கட்கிழமை 3,4,6,7,8,9ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும். எனினும் தரம் ஒன்று மற்றும் இரண்டில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அதையடுத்துப் பாடசாலைகளுக்கு கிருமித் தொற்று நீக்கி விசுறும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவுக்கு உள்பட்ட பாடசாலைகளுக்கு நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தச் செயற்பாடு, எதிர்வரும் சனிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது. (ப-111)

# ரூ.70 லட்சம் பெறுமதியான பழச்சாறு இயந்திரம் கிடப்பில்

## தென்மராட்சி பழ உற்பத்தியாளர்கள் கவலை

தென்மராட்சி, ஜூன் 25

**தென்மராட்சிப் பிரதேசத்தில் உற்பத்தியாகும் மாம்பழம், பலாப்பழம் போன்றவற்றின் மூலம் உற்பத்தியாளர்கள் பயனடையும் நோக்கில் மாவட்டச் செயலகத்தால் மீசாலை பழமுதிர்சோலை நிறுவனத்துக்கு சுமார் 70 லட்சம் ரூபா பெறுமதியில் வழங்கப்பட்ட இயந்திரங்களும் உபகரணங்களும் கிடப்பில் உள்ளன என்றும், பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பழவகைகளை தனியாருக்கு வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் பிரதேச பழ உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மீசாலையில் பழ உற்பத்தியாளர்கள் ஒன்றிணைந்து பழமுதிர்ச்சோலை என்னும் நிறுவனத்தை உருவாக்கி சிறிய இயந்திரங்கள் மூலம் பழச்சாறுகள் உற்பத்தி செய்தனர். இங்கு உற்பத்திசெய்யப்பட்ட பழச்சாறுகளுக்கு கிராக்கி ஏற்பட்டிருந்தது. நிறுவன வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அந்த நிறுவனம் கூட்டுறவு திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது. அதன்பின்னர் பருவகாலத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் உற்பத்தியாகும் மாம்பழ வகைகள் பலாப்பழங்கள் போன்றவற்றைக் கொள்வனவு செய்ததால் பழவகைகள் உற்பத்தியாளர் பருவகாலங்களில் பெருமளவு பழங்களை நிறுவனத்துக்கு வழங்கி வந்தனர்.

இந்த நிறுவனத்தை மேம்படுத்த யாழ்.மாட்டச் செயலகத்தால் 67 இலட்சம் ரூபா செலவில் பழச்சாறு உற்பத்தி மற்றும் ஏனைய பயன்பாட்டுக்கென இயந்திரங்களையும் உபகரணங்களையும் கடந்த வருடம் வழங்கியிருந்தனர். வழங்கப்பட்ட இயந்திரங்கள் இன்னமும் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் செயற்றிட்டம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் பருவகாலங்களில் உற்பத்தி செய்யப்படும் பழவகைகளை நிறுவனத்துக்கு வழங்க முடியாமல் தனியாருக்கும் சந்தைகளிலும் விற்க வேண்டியுள்ளது. என்றனர். இது தொடர்பாக தற்போது இயங்கும் இயக்குநர் சபையினர் கேட்டபோது, இயந்திரங்கள், உபகரணங்கள் போன்றவை வழங்கிய நிறுவனத்தினர் இன்னமும் அவற்றைப் பொருத்தித் தர வராததால் அவற்றைக் களஞ்சியப்படுத்தியுள்ளோம். இயந்திரங்கள் பொருத்தித்தருமாறு அவற்றை வழங்கிய நிறுவனத்து டன் பல தடவைகள் தொடர்புகொண்ட போதும் இதுவரை அவர்கள் வந்து பொருத்தித்தரவில்லை. எனினும் உற்பத்தியாளர்களின். நலன்கருதி பலாப் பழங்களை நான்கு கட்டங்களாகக் கொள்வனவு செய்து கொழும்பில் உள்ள பழச்சாறு உற்பத்தி நிலையத்துக்கு அனுப்பி வருகின்றோம். பலாப்பழ உற்பத்தியாளர்களிடம் பலாப்பழங்களை நிறுவனத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுள்ளோம்-என்றனர். (ப-9)

# சுகாதார நடைமுறைகளை புறந்தள்ளினால் சட்டம் பாயும்

## சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை

கொடிகாமம், ஜூன் 25

தென்மராட்சிப் பகுதியில் பொது நிகழ்வுகளில் கூடும் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாவிட்டால் நீதிமன்ற நடவடிக்கைளுக்கு உட்படுத்தப்படுவர் என்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

பொது நிகழ்வுகளான திருமண நிகழ்வு, ஆலயத் திருவிழா, இறப்புச் சடங்குகள் போன்றவற்றில் மக்கள் சமூக இடைவெளியைப் பேணாது ஒன்றுகூடுகின்றனர். கைகளைக் கழுவாது, முகக் கவசங்களை அணியாது பொது நிகழ்வுகளை நடைமுறைப்படுத்துவதால் பொதுமக்கள் கொரோனா அபாயத்தை எதிர்கொள்கின்றனர்.

இனிவரும் காலங்களில் அனுமதி பெற்றபின் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பேணாவிடின் வழங்கப்படும் அனுமதி இடை நிறுத்தப்படும். அனுமதி பெறும் போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவோம் என அனுமதி பெற்றுவிட்டு அனுமதி பெற்ற பின்பு அனுமதிக்காக விதிக்கப்பட்ட சுகாதார நிபந்தனைகளைக் கடைப்பிடிக்காமல் பொறுப்பற்ற விதமாகப் பொது நிகழ்வுகளை நடத்துவது தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டு வருகிறது. இதனால் பொதுமக்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகும் அபாயம் அதிகரித்துச் செல்கிறது.

எதிர்வரும் காலங்களில் பொது நிகழ்வுகளுக்கு அனுமதி பெறுவோர் நடைமுறைகளைச் சரியாக இறுக்கமாக கடைப்பிடிக்காத பட்சத்தில் பொதுநிகழ்வுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டு நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு நீதிமன்றத்தை நாடவேண்டி வரும். முக்கியமாக ஆலய நிகழ்வுகளில் நடைபெறுகின்ற அன்னதான நிகழ்வு, காவடி எடுத்தல், முள் குற்றிக் காவடி எடுத்தல் போன்றவற்றுக்கு தென்மராட்சியில் அனுமதி இல்லை என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சமூக நடைமுறைகளை பொதுமக்கள் கோயில் திருவிழா நிகழ்வுகள்,மரண வீடுகளில் மற்றும் திருமண நிகழ்வுகளின் போது கடைப்பிடிக்காததால் சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் திடீர் சுற்றி வளைப்பை மேற்கொண்டு வருகின்றனர். (ப-159)

# மதுபோதையில் வீட்டில் நுழைந்த நபரால் பதற்றம்

சாவகச்சேரி, ஜூன் 25

இரவுவேளையில் மதுபோதையில் வீட்டுக்குள் நுழைந்த மர்ம நபரால் மீசாலையில் பதற்றம் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றது. மீசாலை ஏ-9 வீதியில் பழைய ரயில் நிலையத்துக்கு அருகில் ஓய்வுபெற்ற இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர் வீட்டில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வீட்டுக்குள் நுழைந்த மர்மநபர் அங்கிருந்த கட்டிலில் அமர்ந்து அங்கு நடப்பவற்றை அவதானித்தார் எனவும் வீட்டிலுள்ளவர்கள் அவரைக் கண்டு கூச்சலிட்டதும் நபர் பாசாங்கு பண்ணி வீட்டுக்கு வெளியே சென்று அங்கிருந்த கதிரையில் அமர்ந்து கொண்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. வீட்டுக்காரர் சத்தமிட்டதைத் தொடர்ந்து அங்கு கூடிய இளைஞர்களால் அவர் மடக்கிப்பிடிக்கப்பட்டு சாவகச்சேரி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். (ம-131)

# குற்றங்களுக்கு தண்டம் விதிப்பு

சாவகச்சேரி, ஜூன் 25

அனுமதிப்பத்திரமின்றி மரம் ஏற்றி வந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட சாரதி மற்றும் உதவியா ளருக்கு தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.


அனுமதிப்பத்திரமின்றி வாகனம் ஒன்றில் மரம் ஏற்றி வந்தனர் என்ற குற்றச்சாட்டில், கொடிகாமம் பொலிஸாரால் இந்த நபர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. கொரோனா காலத்துக்கு முன்னர் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து தலா 25 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சாரதி குற்றத்தை ஏற்றுக் கொண்டமையை அடுத்து 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ப-9)

# மஹா ஹோமமும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூன் 25

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் ஸ்கந்த மஹாத்மிய மஹா ஹோமமும்,ஸ்ஹந்த சப்த சதி நூல் வெளியீடும் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. கொரோனா முதலிய நோய், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் ஆகியன நீங்கி அகில உலக மக்களும் சாந்தியுடன் சுபிட்சமாக வாழ வேண்டி இந்த ஹோமம் மேற்கொள்ளப் படவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கணேசமூர்த்தி சசிதரன் (சசி)

மண்ணுலகில் 19.03.1967

விண்ணுலகில் 17.06.2010

உங்களை இழந்து ஆண்டுகள் பத்து ஆனாலும்
உங்கள் எல்லையற்ற நினைவுகள்
இந்த மண்ணில் வாழும்வரை
எம் இதயத் தோட்டத்தில் ஓயாது
பூத்துக்கொண்டிருக்கும்.
நீங்கள் விட்டுச் சென்ற உங்கள் நினைவுகளுடன்
வாழ்ந்துகொண்டிருக்கும் ...!

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

54/41, பேக்கரி லேன்,
சண்டிலிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## சிறுநீரகம் தேவை

2 சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட மிகவும் வறுமை நிலையிலுள்ள ஆண் நோயாளி ஒருவருக்கு A(−) குருதிப் பிரிவை சேர்ந்த சிறுநீரகம் உடனடியாக தேவை. தானமளிக்க விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்

தொடர்பு: 077 028 3924, 076 465 1066
077 314 4850

பக்தர்களை...

போதே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


கொரோனாவால் கோவிலுக்கு செல்லும் பக்தர்களின் தொகை 50 ஆக குறைக்கப்பட்டுள்ளது. பிற இடத்தவர்கள் அங்கு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் நேற்றைய அமைச்சரவையில் ஆராயப்பட்டது. அதன் பின்னரே, பக்தர்களின் தொகையை அங்கு அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியது. இவ்வாறு பக்தர்களின் தொகை அதிகரிக்க அனுமதி வழங்கப்பட்டாலும் சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றியே ஆக வேண்டும் என்றும் அமைச்சரவையில் சுட்டிக் காட்டப்பட்டது.

(த)

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 06 . 1936



மறைவு 24 . 06 . 2020

### மோசெஸ் யேசுதாசன்

(ஓய்வு நிலை அதிபர்)

மணற்காட்டைப் பிறப்பிடமாகவும் சக்கோட்டை அல்வாய் வடமத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட மோசெஸ் யேசுதாசன் நேற்று (24.06. 2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மோசெஸ் மரியப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராயப்பு நத்தாலிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் மற்றும் எட்வீசம்மாவின் (ஓய்வு நிலை ஆசிரியர்) பாசமிகு கணவரும், சூசைநாயகி (திருமகள்-UK), சூசைமலர் (செல்வமகள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. ஆனந்தராசா (UK) ஜெரோம்ஜெயதாஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கச்சேரி முல்லைத்தீவு) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மரியபுஸ்பம், ஸ்ரெனிஸ்லாஸ் மற்றும் லூசியா (றோஸ்), இராஜதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் ஜோண்பிள்ளை, திருச்செல்வம், அருள்தாஸ், பிரான்ஸிஸ்கா, Dr.பாக்கியநாதன், இசபெலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அருள்வளன், அமுதவளன், அமலவளன், குயின்ஷா, லோறன்ஷா, வெரோனிஷா ஆகியோரின் பேரன்பு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.06.2020) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக பழைய வேதக் கோயிலடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சக்கோட்டை, அல்வாய் வடமத்தி,
0764649096, 00447504225606

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### செல்வி மனோமகமணி நாராயணசுவாமி

வட்டுக்கோட்டை கள்ளி வீதியைச் சேர்ந்த செல்வி மனோமகமணி நாராயண சுவாமி நேற்று (24.06.2020) புதன்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாராயண சுவாமி மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற மனோகரி தேவி (Retired Teacher of Holy Family Convent, Dehiwela), மனோரஞ்சிதமலர் (Retired Staff Nurse), காலஞ்சென்றவர்களான மகேந்திரன் (Retired Teacher), சிறிதரன் (Retired Agriculture Instructor) மற்றும் மனோகரன் (சட்டத்தரணி), மோகன தாஸ் (பொறியியலாளர்), கலாநிதி ரத்தினவதனி (U.S.A) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பகிரதன் (திருகோணமலை), சுசீலா (Newzealand), லலித்தா (Retired Teacher, St.Bridget's Convent, Colombo-07), திருமகள், கெங்காதரன் (U.S.A) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரமணன் (Australiya), ஜீவனி (U.S.A) ஆகியோரின் பாசமிகு சித்தியும், வித்தியாவின் (Newzealand) அன்பு மாமியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இல.34, கள்ளி ஒழுங்கை, வட்டுக்கோட்டையில் புதன்கிழமை நண்பகல் 12.00 மணிமுதல் வைக்கப்பட்டு, பின்னர் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2020) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெற்று, முற்பகல் 9.00 மணிக்கு வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.34, கள்ளி ஒழுங்கை,
வட்டுக்கோட்டை.

தகவல் : -
நாராயணசுவாமி மனோகரன்
(சட்டத்தரணி)
077 301 3652
நாராயணசுவாமி மோகனதாஸ்
075 053 2761

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 02 . 1946



மறைவு 24 . 06 . 2020

### வைரமுத்து செல்லத்துரை

சோனொழு கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும் யார்வத்தை கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து செல்லத்துரை நேற்று (24.06.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இளையதம்பி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் வனஜா, மஞ்சுளா (ஆசிரியர்-யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), லோகதரன் (பிரான்ஸ்), வாசுகி (ஜேர்மன்), கேசவராஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற கேசவன் (சுகாதார உதவியாளர்) மற்றும் சர்மிலா (பிரான்ஸ்), விஜயரட்ணம் (ஜேர்மன்), ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சகானா, நிவேதிகன், கிசோன், சதுர்சன், கஜானனி, லிகேஸ், அஸ்விகா, கயல்விழி, நவீன், வர்மிகா, ஜனோஜன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2020) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யார்வத்தை,
கோப்பாய் வடக்கு.

தகவல் : -
குடும்பத்தினர்.
077 6346753

# கேள்வி அறிவித்தல்

## வவுனியா தெற்கு, தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா.

## சபைநிதி வேலைத்திட்டம் - 2020

1. தலைவர், பெறுகைக்குழு, வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருள்களுக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா (தொலைபேசி: 024 - 222 5737 / 024 -324 8937, மின்னஞ்சல் - npvstps@yahoo.com) ஊடாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் 25.06.2020 ஆம் திகதியிலிருந்து மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணத்தினை பார்வையிடலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணமொன்றை எழுத்து மூலமான கோரிக்கையினை சமர்ப்பித்து தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா எனும் அலுவலகத்திலிருந்து 25.06.2020 ஆம் திகதி யிலிருந்து 09.07.2020 வரை காலை 09.00 மணிக்கும் பி.ப. 14.00 மணிக்கும் இடையில் மீளளிக் கப்படாத கட்டணமாக ரூபா 2000/ (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
6. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா எனும் முகவரிக்கு 09.07.2020 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்களின் அல்லது எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றம் செய்யவோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து (49 நாள்கள் (நாற்பத்தி ஒன்பது நாள்கள்) 27.08. 2020 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/43/5/5.5/C/8/20 | வீதி விளக்குள் கொள்வனவு செய்தல் | 0.860 | 1 மாதம் | அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் | 9000.00 | 27.08.2020 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 24.07.2020 ஆம் திகதி 14.30 மணிக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்துகொள்ளமுடியும்.

தலைவர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை நெளுக்குளம்.

25.06.2020

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
23 . 01 . 1934



மறைவு
28 . 05 . 2020

## அமரர் கந்தையா சரவணமுத்து

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்)

கடந்த 28.05.2020 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (25.06.2020) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் 27.06.2020 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற உள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## நாகபூஷணி திருமண சேவை
### மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த குற்றமற்ற, சூரி/செவ் உள்ள 15 கிரக பாவமுடைய 1994 இல் பிறந்த டாக்ரர் மணப் பெண்ணுக்கு BSc இக்கு மேல் கல்வி கற்ற மணமகன் தேவை.

257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596

# சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



25.06.2020

## திருமதி பவானி தியாகலிங்கம்

கலைப்பட்டதாரி (B.A) பட்டபின் கல்வி டிப்ளோமா PGDE)
இலங்கை ஆசிரியர் சேவை - தரம் - I Best Wishes

**சேவை விவரம்:**
- கண்டி / புசல்லாவ சி.சி. தமிழ் வித்தியாலயம் 27.12.1984 - 01.03.1988
- கண்டி / புனித அந்தோனியார் கல்லூரி 02.03.1988 - 14.02.1993
- யா / உரும்பிராய்சைவத் தமிழ் வித்தியாலயம் 15.02.1993 - 20.07.2010
- யா / உரும்பிராய் இந்துக் கல்லூரி 21.07.2010 - 24.06.2020

பார் போற்றும் யாழ்ப்பாணத்தில்
- ஏற்றமுடன் மிளிரும்
உரும்பிராயில் பண்பிலே உயர்ந்த
- குடும்பத்தில் வந்துதித்த பவானியாள்
கல்வித்துறையில் கலங்கரை விளக்காய்
கற்றுத்தேர்ந்து பட்டங்கள் பெற்றுமே
ஆசிரியத்துறையில் அழகாய் இணைந்து
மாணவ உலகில் மனநிறைவாக
சிறப்புறவே வரலாறு, புவியியல், குடியியல்
- எனும் பாடங்களை
பக்குவமாகக் கற்பித்து நின்றுமே
மாண்புறவே மாணவ சமூகத்தை
- உருவாக்கிய உத்தமியாள்
அகவை அறுபதில் இளைப்பாறும்
- இவ்வேளை
ஆண்டவன் அருளால் நீடுகாலம் இனிதே
- வாழ வாழ்த்துகின்றோம்.

- வாழ்த்துவோர் -
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி சமூகம்.

**கொரோனா...**

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 2001 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்தஎண்ணிக்கை 1,562 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்று நோயாளிகளில் 428 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சைபெற்று வருகின்றனர். 30 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர். இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 11 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(த)

# Invitation for Bids

Secretary, Ministry of Finance,
Planning & Local Government, Northern Province.

## Tender Process of Providing Building on Rental Basis for Sales Centre, NP/05/02/PBRBSC/2020/01

1. The Secretary of the Ministry of Finance, Planning & Local Government, Northern Province now invites sealed bids from eligible and qualified bidders for the Providing Building on Rental Basis for Sales Centre is situated at Kandy Road, Kaithady. It is located 1.1km from Kaithady junction and 1.0km from Navatkuli junction respectively. Furthermore, this sales centre is adjoining to Ammachi Traditional Food Centre which was opened by the Tourism Bureau.
2. The Intended Service Period is one years.
3. Bidding will be conducted through National Competitive Bidding.
4. Interested eligible bidders may obtain further information from Accountant, Ministry of Finance, Planning & Local Government, Northern Province. (0212057112); and inspect the Bidding Documents at Ministry of Finance, Planning & Local Government, Northern Province, Kandy Road, Kaithady, Jaffna from 25.06.2020 to 15.07.2020 at 09:00 AM to 15:00 PM on working days.
5. A complete set of Bidding Documents could be purchased by interested bidders on the submission of a written application to the Ministry of Finance, Planning & Local Government, Northern Province, Kandy Road, Kaithady, Jaffna and upon payment of a non-refundable fee Rs.200.00 will be paid at the Ministry of Finance, Planning & Local Government, Northern Province.
6. Bids must be delivered to the address below on or before 11:00 am on 16.07.2020. Late bids will be rejected. Bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person or on-line at the address below at 11:00 am on 16.07.2020.

Secretary,
Ministry of Finance, Planning & Local Government,
Northern Province.
Tel. 0212057110

## 20,000...

இவ்வாறு தெரிவித்தார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: தமிழர் தாயகப் பகுதிகளில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 20 ஆயிரம் உள வாளிகளை நடமாடவிட்டுள்ளார். ஜனநாயகத்தில் பெற்ற வெற்றி என்று கூறிக் கொண்டு இந்த நாட்டில் அவர் முழுமையான இராணுவ ஆட்சி ஒன்றை நிறுவினாலும் சர்வாதிகார ஆட்சியொன்றை நிறுவினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அப்படித்தான் நிலைமைகள் இருக்கின்றன. அவர் அத்தகைய ஆட்சி அமைக்க வாய்ப்புகள் உள்ளன. ஏனெனில், அவர் இராணுவத்தில் கடமையாற்றிய அனுபவங்கள் கைகொடுக்கின்றன.

எதிர் அணியிலுள்ள ஜனநாயக சக்திகள் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியும் பல வீனப்பட்டு பிளவுபட்டு நிற்கின்றது.

அதை விட முஸ்லிம்கள் தரப்பிலும், மலையக தரப்பிலும்கூட எல்லோரும் பலமாக அல்லது ஒன்றாக இருக்கின்றார்கள் என்ற நிலைமை இன்னும் ஏற்படவில்லை.

இந்தநிலைமையில், வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒட்டுமொத்தமாக ஒரு பலமான நிலையை நிரூபிக்க வேண்டிய, பிரதிநிதித்துவத்தை நிரூபிக்க வேண்டிய ஜனநாயக சக்தியாக பலமடைய வேண்டிய நிலைமை ஏற்பட வேண்டும்.

ஆனால் இதுவரையில் கிழக்கிலிருந்து வடக்கு வரைக்கும் பல மாவட்டங்களுக்கு நான் பயணம் செய்திருக்கின்றேன். பல நிகழ்வுகளில் கலந்துகொண்டிருக்கின்றேன். சில இடங்களில் அண்மைக்கால சில நிகழ்வுகள் தொடர்பாக மக்கள் சில சங்கடங்களை எதிர்கொண்டிருந்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரு வெற்றிபெற வேண்டும் என்பதில் அவர்கள் மிக உறுதியாக இருக்கின்றார்கள் என்று தெரிவித்தார். (த-20)

## அக்கராயன்...

கள் தெரிவிக்கின்றன.

அந்த மருத்துவமனையை கொரோனா சிகிச்சையளிக்கும் மருத்துவமனையாக மாற்றுவதற்கு அங்குள்ள மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து கடந்த மாதம் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர். எனினும், அதைத் தாண்டி கொரோனா சிகிச்சை மருத்துவமனையாக மாற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 80 வீதமான வேலைகள் நிறைவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், பணிகளை மேற்கொண்டு தொடரவேண்டாம் என்று தகவல் விடுக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய உத்தியோகபூர்வ தகவல் வடக்குக்கு இன்று வரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-6)

## புலிகளின்...

தமிழர் வரலாற்றை மாற்றியமைக்கும் நோக்கில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, ஜனாதிபதி செயலணியை அமைத்திருக்கும் நிலையில், இந்த விவகாரத்தில் தலையிட்டு எமக்கு உதவ வேண்டிய தார்மீக பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது" என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளருமான மாவை சோ.சேனாதிராசா தெரிவித்திருந்தார். அவரின் இந்தக் கருத்துத் தொடர்பில் உதய கம்மன்பில மேலும் தெரிவித்ததாவது:

"2009ஆம் ஆண்டு போர் நிறைவுக்கு வந்த பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் மறுவடிவமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்றது. அதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நிகராக எந்தக் கட்சிகளும் வடக்கு, கிழக்கில் வளரவில்லை.

கூட்டமைப்பினர் ராஜபக்ச அரசை அன்று தொட்டு இன்று வரைக்கும் எதிரியாகப் பார்க்கின்றனர். அத்துடன் அரசின் வேலைத்திட்டங்கள் ஒவ்வொன்றையும் நிராகரித்து வருகின்றனர்.

தமிழ் மக்களின் வரலாற்றையும் இருப்பையும் மாற்றியமைப்பது ஜனாதிபதி செயலணியின் நோக்கம் அல்ல.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் தங்கள் பகுதிகளில் சுதந்திரமாக மகிழ்ச்சியாக வாழ வேண்டும். இந்த நிலைப்பாட்டில் அரசு உறுதியாக உள்ளது. அதைவிடுத்து தமிழர்கள் வாழும் நிலங்களை ஆக்கிரமிப்பது அரசின் நோக்கமல்ல" - என்றார். (த-22)

## தேர்தலின்...

ராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பலர் கடந்த காலங்களில் வெளியேறியிருக்கின்றார்கள். அது துரதிர்ஷ்டவசமானது. அது எனக்கு கவலையளிக்கின்றது. தேர்தல் முடிந்த பின்னர் நாங்கள் அவர்களையும் இணைத்துப் பயணிப்போம். தற்போதுள்ள மோசமான கால கட்டத்தில் அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டும் என்ற ஆதங்கத்தோடு பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம்.

மாற்றுத் தலைமை பற்றி யாரும் பேசலாம். அந்த நோக்கோடு கட்சிகளும் இயங்கலாம். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டாயம் இன்னும் பலமடையவேண்டும். நாங்கள் மாற்றுத் தலைமை பற்றி பேசவேண்டியது அவசியமில்லை. அரச ஆதரவுக் கட்சியினரும் சுயேச்சைகளும் இணைந்து எங்கள் வாக்குகளைப் பிரிக்கின்றார்கள். அதற்கு இடமளிக்காமல் கூட்டமைப்புக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும். அந்தப் பலத்தோடு கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்யவேண்டும். இந்தக் கருத்துத்தான் இன்று வரையில் பலமாக உள்ளது. நாங்கள் தேர்தல் அறிக்கையையும் வெளியிட்டு மக்கள் மத்தியில் ஆதரவு கேட்டு வாக்களிக்கச் செய்தால் எமது ஆதரவு பலமடங்காக அதிகரிக்கும். எங்களை மக்கள் அமோகமாக வெற்றியடையச் செய்தால் மாற்றுத் தலைமை என்ற பேச்சே இல்லாமல் போகும்- என்றார். (த-ஒ.5,20)

## மணல்...

சமூக அமைப்பான மணற்காட்டு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கே மணல் அகழ்வுக்கான அனுமதி வழங்கப்பட்டது. அந்த அமைப்பால் மணல் அகழ்வதற்குரிய மணல் மேடுகள் அப்போதைய மாவட்டச் செயலர் நா.வேதநாயகனால் அடையாளப்படுத்தப்பட்டன.

மணல் அகழ்வு நடவடிக்கைகள் சமூகமாக இடம்பெற்று வந்தது. மணல் விநியோகம் தனியார் பாரவூர்தி கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. சில வாரங்களுக்கு முன்னர் மணல் விநியோக நடவடிக்கையை தனியார் நிறுவனம் முன்னெடுத்தது. அதற்கு உள்ளூர் பாரவூர்தி உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து இரண்டு தடவைகள் போராட்டம் நடத்தியிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது பருத்தித்துறைப் பொலிஸார் தலையீடு செய்திருந்தனர். தனியார் நிறுவனத்துக்கு இரண்டு 'பெர்மிட்டுக்கு' மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், அதற்கு மேலாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு விநியோகம் இடம்பெற்றிருந்தமையால், தனியார் நிறுவனத்தை தொடர்ந்து விநியோக நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்க முடியாது என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

அன்றைய தினம் மாலையில் அங்கு வந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர், மணல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட உள்ளூர் உழவு இயந்திரங்கள் சிலவற்றைப் பிடித்ததுடன், தமது எல்லைக்குட்பட்ட பகுதியில் காடுகளை அழித்து மணல் அகழ்வு நடவடிக்கையை முன்னெடுக்க அனுமதிக்க முடியாது என்று குறிப்பிட்டனர். அந்தப் பகுதிக்குள் பிரவேசித்தால் கைது செய்யப்படுவீர்கள் என்றும் எச்சரித்துள்ளனர்.

இதன் காரணமாக குடாநாட்டுக்கான மணல் அகழ்வு நடவடிக்கையை முன்னெடுக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது. (ஓ.5)

## எரிபொருள்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதைத் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற எரிபொருளின் விலையை இந்த ஆண்டின் இறுதி வரை மாற்றமின்றி கொண்டு செல்ல அரசு தீர்மானித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அதன் நன்மையை மக்களுக்கு பெற்றுகொடுக்க அரசு தவறியுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. எனினும், உலக சந்தையில் எரிபொருளின் விலை எதிர்வரும் காலங்களில் அதிகரிக்கப்பட்டாலும், இலங்கையில் வருட இறுதிவரை விலையில் மாற்றம் இருக்காது. எனினும், டீசல் ஒரு லீற்றரின் விலை 20 ரூபாவாலும், பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 35 ரூபாவாலும் நட்டம் ஏற்படும் வகையிலேயே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மக்களுக்கு எரிபொருளை விநியோகித்து வருகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (த)

## ஊடகவிய...

விதிக்கப்பட்டுள்ளது. எனவே வெளியிடத்தைச் சேர்ந்த பக்தர்கள் அங்கு செல்வதைத் தடுப்பதற்காக படகுச் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு நயினாதீவில் வசிப்பவர்களுக்கு பாஸ் வழங்கப்பட்டு, அவர்கள் இரு நாள்களுக்கு ஒருதடவையே வெளியிடம் சென்றுவர அனுமதிக்கப்படுவதாக அந்தப் பிரதேச மக்கள் மனித உரிமைக்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்,

இந்த நிலையில் குறித்த மக்களின் நிலை தொடர்பில் செய்தி சேகரிக்கவென ஊடகவியலாளர்கள் சிலர் குறிகாட்டுவான் இறங்குதுறைக்குச் சென்றனர். அங்கிருந்து அவர்கள் நயினாதீவு செல்வதற்காக படகுக்கு காத்திருந்த போது, அங்கிருந்த பொலிஸார், பாஸ் இல்லாமையினால் நயினாதீவு போகவிடாமல் தடுத்தனர். எனினும் தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஊடகவியலாளர் அடையாள அட்டையை அவர்கள் பொலிசாருக்குக் காண்பித்தபோதும், பொலிசார் தமது பிடியில் உறுதியாக இருந்ததால் ஊடகவியலாளர்கள் திரும்பிச்சென்றனர்.

நயினாதீவு ஆலயத்துக்கு 50 பேர் செல்லக்கூடாது என்பதற்காக , நயினாதீவு மக்களின் நிலை பற்றி அறியவும் எவரும் போகக்கூடாதா என்று அங்கிருந்தவர்கள் கேள்வியெழுப்பினர்.

"ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபரின் தலைமையில் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அங்கு எல்லோரும் ஏற்றுக்கொண்டதுக்கு இணங்க உற்சவ காலங்களில் நயினாதீவில் நிரந்தரமாக வசிப்பவர்களை அன்றி யாழ்ப்பாணம் உள்ளிட்ட வெளியிடங்களில் இருந்து எவரும் வந்து கலந்துகொள்ள முடியாது என கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. கொரோனா பாதுகாப்பு காரணமாகவே இந்த பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி வெளியிடங்களில் (யாழ்ப்பாணத்தில்) இருந்து வரும் உபயகாரர்களுக்கும், உற்சவத்துக்கு தேவையான பொருள்களைக் கொண்டு செல்பவர்களுக்கும் மட்டுமே அனுமதிக் கடிதங்களை வழங்குகின்றோம். எந்தச் சந்தர்ப்பதிலும் ஏனைய பொது மக்களுக்கு பாஸ் வழங்கும் நடைமுறை இல்லை' எனவேலணை பிரதேச சபை செயலாளர் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனா அச்சத்தால் நாடுமுழுதும் ஊரடங்கு அமுலில் இருந்தபோதுகூட , மருத்துவ, சுகாதார துறையினரைப் போல ஊடகவியலாளர்களும் எப்போதும் ,எங்கேயும் சென்றுவர அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், நயினாதீவு மக்களின் அவல நிலையை வெளிக்கொணர அங்கு சென்ற ஊடகவியலாளர்களைப் பொலிஸார் திருப்பி அனுப்பிய சம்பவத்துக்கு பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (அ)

## வாள்கள்..

கொழும்புத்துறை பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலில் வீடொன்றிலிருந்து வாள் மீட்கப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் மீட்கப்பட்டிருந்த வாளையும் இராணுவத்தினர் விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

**தவசிகுளத்தில்**

தென்மராட்சி, தவசிகுளம் பகுதியில் வைத்து நேற்றிரவு 9 மணியளவில் வாளுடன் சென்றார் என்று ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உசனை சேர்ந்த கமலதாசன் ஜதுசன் (வயது-24) என்பவரே இவ்வாறு வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாள் கொண்டு சென்றமை தொடர்பிலும், வேறு வாள் வெட்டுச் சம்பவங்களுடன் அவருக்குத் தொடர்புள்ளதா என்றும் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (த-20,159)

# கூட்டமைப்பின் மிரட்டலுக்கு அடிபணிய அரசு தயாரில்லை

## தினேஷ் திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 25

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மிரட்டல்களுக்கு அரசு ஒருபோதும் அடிபணியாது. நாட்டின் உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிட முடியாது. அதை மீறித் தலையிட வெளிநாடுகளுக்கு இந்த அரசு அனுமதி வழங்கவில்லை.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

"கிழக்கு மாகாணத்தின் சகல தொல்பொருள் பிரதேசங்களையும் பாதுகாக்கும் வகையிலேயே ஜனாதிபதி செயலணியை ஜனாதிபதி நிறுவியுள்ளார். தமிழர்களின் வரலாற்றை மாற்றியமைப்பது இந்தச் செயலினியின் நோக்கமல்ல" எனவும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மண்ணில் தமிழர் வரலாற்றை மாற்றியமைக்கும் நோக்கில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, ஜனாதிபதி செயலணியை அமைத்திருக்கும் நிலையில், இந்த விவகாரத்தில் தலையிட்டு எமக்கு உதவ வேண்டிய தார்மீக பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது' என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளருமான மாவை சோ. சேனாதிராசா தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தக் கருத்துத் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பதிலளிக்கும்போது மேலும் தெரிவித்ததாவது:

"எந்தப் பிரச்சினைக்கும் இலங்கை அரசு தீர்வு தராது; சர்வதேசம்தான் தீர்வு தரும் என்று கூறி மக்களை ஏமாற்றுவதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னரின் இயல்பு.

சந்தேகங்கள் இருந்தால் பிரச்சினைகள் இருந்தால் அரசுடன்தான் பேச வேண்டும். அதைவிடுத்து வெளிநாடுகள், சர்வதேச அமைப்புகள் தலையிடும் என்று நம்புவதில் பயனில்லை.

நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய மூவின மக்களும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற தூய எண்ணத்துடன்தான் ஜனாதிபதி பணியாற்றுகின்றார்"- என்றார்.

(கு-22)

**வீடு வாடகைக்குத் தேவை**

பலாலி வீதி, உரும்பிராய்
மருதனார்மட வீதி, இராசபாதை
ஆகிய இடங்களிற்குள் அமைந்த வீடு
விரும்பத்தக்கது.
தொடர்பு இலக்கம்: 077 672 7941

**பெண் வேலை ஆள்கள் தேவை**

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழில் ஸ்தாபனத்திற்கு பொதி செய்வதற்கு பெண் வேலை ஆள்கள் தேவை. வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை. வேதனமாக நாளொன்றுக்கு ரூபா 600 /= வழங்கப்படும்.
076 118 4010

**Sub Contracter தேவை**

எமது நிறுவனத்திற்கு இரண்டு மாடி வீட்டிற்கு கட்டட வேலைக்கு Sub Contracter தேவை.
- மேசன் வேலை
- பலகை வேலை
- கம்பி வேலை
- சட்டறிங் வேலை

தொடர்பு: 077 985 1946, 077 592 5371

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

வெளி நாடுகளுக்கான பொதிகள் கடிதங்கள் சேவை DHL மூலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
திருமுருகன் கொம் நெற் (Pvt)Ltd
321, K.K.S. Road, Jaffna
கிளைகள்:நெல்லியடி, திருநெல்வேலி, கொழும்பு. 0777 554 528

ஜனவரி மின் கட்டணம்

# செலுத்தாவிடில் மின் துண்டிக்கப்படும்

## மின்சார சபை அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 25

2020ஆம் ஆண்டு ஜனவரி மாத மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாத பாவனையாளர்களின் மின் வழங்கலை துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை கடந்த ஏப்ரல் மாதத்தில் 50 சதவீத மின் பாவனையாளர்களிடமிருந்தும், மே மாதத்தில் 65 சதவீதத்துக்கும் அதிகமான பாவனையாளர்களிடமிருந்தும், ஜூன் மாதத்தில் 90 சதவீதத்துக்கும் அதிகமான பாவனையாளர்களிடமிருந்தும் மின் கட்டணத்தை அறவிட்டுள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பொது மக்கள் மத்தியில் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டதால் மின்சார கட்டணங்கள் தொடர்பான பிரச்சினை எழுந்துள்ளது என்று மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனா ஊரடங்கால் மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வீட்டு மின் நுகர்வு அதிகரித்துள்ளது. கடைசியாக வழங்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணப் பட்டியல் சரியானது. முதல் பார்வையில் அதிக கட்டணம் வசூலித்ததாகத் தோன்றுகின்றது. ஆனால் பாவனையாளர்கள் பயன்படுத்திய அலகுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

அதிகமாக கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால் பணத்தையும் மீட்டெடுக்க முடியும். அல்லது அடுத்த மாத மின் பட்டியலில் கழிக்க முடியும்.

2020 மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாத மின் கட்டணப் பட்டியல்களை தாமதமாகச் செலுத்தும்போது தாமதக் கட்டணம் வசூலிக்கப்படாது - என்றனர். (து)

இலங்கை மின்சார சபை

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 06 | | 23 |
| 07 | | 06 |
| 1948 | | 2020 |



## கந்தசாமி கருணாகரன்

**(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்-RDA)**

இல.57, பலாலி வீதி, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கருணாகரன் கடந்த (23.06.2020) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான உமாபதி-நாகேஸ்வரி தம்பதியரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி-அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கௌரியின் அன்புக் கணவரும், ரமணன் (Business), உமையாள் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபராஜாவின் அன்பு மாமனாரும், விஸ்ணுகாந்த், ஹரிஷ் பவன், லோசனா ஆகியோரின் பாசமிகு பேரனும், கிருபாகரன், ஞானாகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தேன்மொழி, லிங்கேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ரட்ணமுகுந்தன், உமாகாந்தன், தேவகி, காயத்திரி, கௌரிசங்கர், தயாபரி, யசோதா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2020) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : -
க.ரமணன் (மகன்)
குடும்பத்தினர்.

இல.57, பலாலி வீதி, கந்தர்மடம்.
0777 593 794

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 08 | | 26 |
| 01 | | 05 |
| 1938 | | 2020 |



## அமரர் நாகலிங்கம் பரமேஸ்வரி

கடந்த (26.05.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயாரின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த (23.06.2020) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்று (25.06.2020) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

எமது துயரில் கலந்துகொண்டு தொலைபேசி ஊடாகவும், நேரில்வந்தும் ஆறுதல் கூறியவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ரஞ்சினி பவனம்,
பருத்தித்துறை வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.